DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial
Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1540 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 10, 2025

# FEDERATION OF GLOBAL TAMILS அமைப்பு நடத்தும் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு இன்று 10ம் திகதி ஸ்காபுறோ பல்கலைக் கழக வளாகத்தில் சீரான திட்டமிடலுடனும் உணர்வுபூர்வமாகவும் ஆரம்பமாகின்றது

FEDERATION OF GLOBAL TAMILS
அனைத்துலகத் தமிழர் பேரவை

எமது தமிழர் தாயகம் மீது கொண்ட அக்கறை மற்றும் அந்த மண்ணின் அபிவிருத்தி மக்களின் வாழ்வில் மேம்பாடு ஆகியவற்றை நோக்காவும் பணியாகவும் கொண்டு கனடாவில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு நிறுவப் பெற்ற அமைப்பான **FEDERATION OF GLOBAL TAMILS** நடத்தும் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு இன்று 10ம் திகதி வெள்ளிக்கிழமையன்று மாலை 5.39 மணிக்கு ஸ்காபுறோ பல்கலைக் கழக வளாகத்தில் சீரான திட்டமிடலுடனும் உணர்வுபூர்வமாகவும் ஆரம்பமாகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள அங்குரார்ப்பண வைபவத்தில் உலகெங்கிலும் இருந்து மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள பேராளர்கள் மற்றும் கனடிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அழைக்கப்பெற்ற பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.
(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# கனடாவில் கேதீஸ் அவர்களின் "தமிழாரம்" தொலைக் காட்சி நடத்திய "7 ஸ்வரங்கள்" பாடல் போட்டி இறுதிச் சுற்று முடிவுகள் பார்வையாளர்களின் பாராட்டுக்களைப் பெற்றன.





பல்துறை வித்தகரும் சமூகப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருபவரும் கனடாவில் வெற்றிகரமாக ஊடகத்துறையிலும் இயங்கிவருபவருமான கேதீஸ் அவர்களின் “தமிழாரம்“ தொலைக் காட்சி நிறுவனம் நடத்திய “7 ஸ்வரங்கள்“ இளையோர் பாடல் போட்டி இறுதிச் சுற்றுப் முடிவுகள் பார்வையாளர்களின் பாராட்டுக்களைப் பெற்றன.

கடந்த 4ம் திகதி சனிக்கிழமையன்று மாலை நடைபெற்ற மேற்படி 7 ஸ்வரங்கள்“ இளையோர் பாடல் போட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டியில் சிறப்புவிருந்தினர்களாகவும் சிறப்பு நடுவர்களாகவும் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த பாடகர் “கலைமாமணி” ராமு மற்றும் பாடகி வர்சா ஆகியோரும் கனடா வாழ் பாடகி சிம்மையும் பங்களித்தார்கள்.

மேற்படி 7 ஸ்வரங்கள்“ இளையோர் பாடல் போட்டியின் இறுதிச் சுற்றில் முதலாவது வெற்றியாளராக செல்வி சுயநித்தா சுயந்தன் 2வது வெற்றியாளராக சியானி சுதாகரன் 3வது வெற்றியாளராக சாய்லக்‘மி சத்தியநாதன்‘ சமூக ஊடக புகழ் பாடகியாக அன்றீனா கெங்காதரன முழுச்சுற்று சிறந்த பாடகராக சந்தோஸ் குகன்‘ பாராட்டுக்களைப் பெற்ற பாடக பாடகிகளாக அக்சனா ஆரூரன் லக்சன் கெங்காதரன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
(தொடர்ச்சி 12ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


TORONTO
SATURDAY, OCT 18 2025 @ 5:30 PM
ARMENIAN COMMUNITY CENTER
SUNDAY, OCT 12 2025 @ 5:30PM
VANIER COLLEGE AUDITORIUM
MONTREAL
TICKETS
$100 & $50
Title Sponsor
HOMELIFE HIGHER STANDARDS
ALPHA REAL ESTATE LTD. BROKERAGE
Killi Chelliah BSc. Eng.
SALES REPRESENTATIVE
Dir: 416.624.7562
OFF: 416-818-0304 | FAX :647 366 9596
Gold Sponsor
Future Line Ltd
CUSTOM PVC EXTRUSION
www.futureline.ca
Silver Sponsor
Lucvaa KITCHENS
www.Lucvaa.com
COOLMASTER.CA
COOL MASTER REFRIGERATION
BEST CUSTOM BUILD COMMERCIAL REFRIGERATION
416-742-0742
அன்புநெறி
Anpuneri
Humanitarian Relief Organization.
பெருமையுடன் வழங்கும்
நாத சங்கமம்
WAGESHAN & HIS BAND
2025
647-800-8742
ARMENIAN COMMUNITY CENTRE | 45 HALLCROWN PL, NORTH YORK
Thermo Care HEATING & COOLING
BEST SERVICE
BEST WARRANTY
BEST PRICE
513 East Avenue Scarborough ON M1C 2X1
416 825 9373 | 416 640 1174
www.themocare.ca
Supreme Lube
ETOBICOKE
240 Dixon Rd
(416) 241-5588
PICKERING
1051 Brock Rd Unit 1,
(905) 426-5598
PICKERING SCARBOROUGH AIRPORT
GFORCE CAR & TRUCK RENTAL
www.gforcerental.com
416-894-6969
ARS construction
INTERLOCKING, DECK, FENCE, ASPHALT PAVING
BASEMENT RENOVATION
(647) 861-1979
Senthooran Punithavel
the co-operators
Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario, M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
babuflorist@gmail.com
Joseph (Jude)
Project Manager
Green Field
416-986-9222
winsmart.ca
WINSMART
10 Milner Business Ct Suite 317, Scarborough
647.777.8361
GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance
DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC
7611 PINE VALLEY DR #19, WOODBRIDGE, ON L4L 0A2
416-335-3683
ALL YOUR CATERING NEEDS
நந்தா
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON
TAMIL RESTAURANT IN GTA
416 - 626-8421
www.nantha.com
With Best Compliments From
RE/MAX COMMUNITY
GAJAN MAHAKANAPATHY
416.999.2777
J&J GROUP
FROM
BIDDINGTON
Building Quality for Generations
Gobal Mailwaganam
1962 Yonge Street Suite 200
Toronto, Ontario M4S 1Z4

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# சூழல் பாதுகாப்புக் காரணங்களுக்காக போராடும் பொதுமக்களை "பைத்தியக்காரகள்" என்று எண்ணுகின்றதா அநுராவின் அரசும் அதன் "ஏவல்நாய்"களான பொலிஸ் படையும்?

ஒரு தேசத்திற்குள் அடங்கும் ஒரு கிராமமோ அன்றி ஒரு நகரமோ இயற்கைக்கு மாறாக மாற்றம் பெறாமல் பாதுகாக்கப்பெற்றால் தான். அந்த தேசம் பாதுகாக்கப்பெறும் என்பதை இயற்கை விஞ்ஞானிகள் பலர் சான்றுகளுடன் எடுத்துச் சொல்லி வருகின்றார்கள். அதே போன்று நாம் வாழும் இந்த ஹபூமித் தாயின்ஹ மடியையும் அதன் வயிற்றையும் வளிமண்டலத்தையும் இயற்கைக்கு முரணான வகையில் நாம் மாற்றம் செய்ய முற்பட்டால் அந்தத் தாய் நிச்சயம் வேதனைப்படுவாள் அத்துடன் அவளது இருப்பும் பாதிக்கப்படும்.

இந்த வகையான விடயங்களில் உலகெங்கும் அதிகம் கவனத்துடன் செயற்படுபவர்கள் சூழல் விஞ்ஞானத்தைக் கற்றவர்களும் அதனைக் கடைப்பிடிப்பவர்களும் என்பதை நாம் கண்டு கொள்ள வேண்டும். இவ்வாறு இயற்கைக்கு மாறான திட்டங்களை அந்தந்த நாடுகளின் அரசாங்கங்கள்நடைமுறைப் படுத்த முயலுகின்ற போது, அங்கு வாழும் சூழல் பற்றிய அக்கறை கொண்டவர்கள் கிளர்ந்து எழுவார்கள் அல்லது போராட்டங்களை நடத்துவார்கள். இயற்கைக்கு மாறான திட்டங்களை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை நடத்த சில தீவிரமான இயற்கைப் பற்றாளர்கள் தங்கள் உயிர்களைக் கூட அர்ப்பணிப்பதற்கு தயங்க மாட்டார்கள்.

இவ்வாறான ஒரு போராட்டம் தான் எமது தாய் மண்ணும் தமிழ் மண்ணுமான மன்னார் பிரதேசத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைக்க திட்டமிட்ட முன்னைய அரசாங்கங்கள் மக்களின் போராட்டங்கள் காரணமாக அதனை பின்போட்டுக் கொண்டு சென்றன. மன்னார் பிரதேச மக்கள் கட்சி பேதமின்றி அந்த போராட்டங்களில் கலந்து கொண்டார்கள். இதனால் முன்னைய காலங்களை அரசாங்கங்களின் திட்டம் தவிடுபொடியானது என்று மன்னார் மக்கள் எண்ணி திருப்தியுடன் தங்கள் வாழ்க்கையை கொண்டு சென்றார்கள்

எனினும் தற்போதைய அநுர குமார திசநாயக்க அவர்களின் அரசாங்கம் பதவியேற்ற பின்னரும் மன்னாரில் காற்றலை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பாரிய இயந்திரங்களை அ ங்கு நிறுவ அதற்கு பொறுப்பான அமைச்சுக்களும் அதிகாரிகள் நடவடிக்கைகளைத் தொடர்ந்தார்கள் இதனால் மக்கள் போராட்டத்தை மீண்டும் நடத்தத் தொடங்கினார்கள்.

இவ்வாறான நிலையில் மன்னார் மக்கள் இலங்கை ஜனாதிபதிக்கும் மனுக்களை அனுப்பி வைத்தும் அமைச்சர்களுக்கும் இந்த திட்டத்தின் பாதிப்புக்களை எடுத்துச் சொல்லியும் போராட்டங்களை தொடர்ந்து நடத்திக் கொண்டிரந்தனர்.

இந்த திட்டத்தை எவ்வாறாயினும் நிறைவேற்றியே தீருவோம் என்றும் அரசாங்கமும் அதிகாரிகளும் தொடர்ச்சியாக முயன்று கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதி அவர்களிடம் இருந்து தமக்கு சாதகமான பதில்வரும் என்று போராட்டக்காரர்கள் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த காற்றலை மின்சார உற்பத்தித் திட்டம் கைவிடப்படுவதாக இல்லை.

இந்த வாரத்திலிருந்து சுமார் 50 நாட்களுக்கு முன்பாக தொடங்கிய மன்னார் மக்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்க இலங்கை ஜனாதிபதி தங்கள் விண்ணப்பங்களையும் எண்ணங்களையும் ஏற்றுக் கொள்வார் என்று அவர்கள் காத்திருந்தார்கள் .

ஹஹ ஜனாதிபதியின் முடிவுகள் மன்னார் மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியையும் கவலையையும் தருகிறது.ஜனாதிபதி தனது மக்களாகிய எங்களுடன் பேசுவார் மக்களின் வாழ்வை பாதிக்காத வகையில் கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பார் என எதிர்பார்த்து இருந்தோம். இப்போது நாங்கள் வஞ்சகமான முறையில் ஏமாற்றப் பட்டுள்ளோம். ஜனாதிபதியின் முடிவுகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.உடன் வேலைகளை நிறுத்தி ஜனாதிபதியுடன் பேசி முடிவுகளை எடுக்க எதிர்பார்க்கின்றோம்ஹஹ. இவ்வாறு போராட்டக்காரர்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்க

காற்றாலை கோபுரங்கள் அமைக்க தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டு வரும் வேலைகள் நடைபெறத் தொடங்கின என்ற செய்தி மன்னாரில் போராட்டக்காரர்களுக்கு கிடைத்தது.

இதனால் அவர்கள் தங்கள் போரட்டங்களை தீவிரப்படுத்தினார்கள்.

இந்த நிலையிலும் ஜனாதிபதிக்கு மீண்டும் கடிதம் எழுதினார்கள் "தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டு வரும் வேலைகள் நடைபெறுகின்ற நிலையில் தயவுசெய்து அவற்றை உடன் நிறுத்தி மக்களிடம் பேச நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என்று அவர்கள் வேண்டிக் கொண்டார்கள். மன்னார் அரசாங்க அதிபரிடமும் அந்த வேண்டுகோளை விடுத்தார்கள்.

ஆனால் மக்களின் எதிர்ப்பை மீறி நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்புடன் கலகம் அடக்கும் போலீசார் துணையுடன் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பொருட்கள் பாரிய வாகனங்களில்

மன்னார் நகரை நோக்கி கொண்டுவரப்பட்டு கொண்டிருக்க அதற்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்தி தங்கள் உயிரையும் துச்சமென மதித்து போராடினார்கள். இந்த நிலையில் ஒன்று கூடிய பல நூற்றுக்கணக்கான மக்கள் மற்றும்

அருட்தந்தையர்கள் இணைந்து மன்னார் நுழைவு பகுதியில் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைக்க தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டு வரும் வேலைகள் நடைபெறுகின்ற நிலையில் தயவுசெய்து அவற்றை உடன் நிறுத்தி மக்களிடம் பேச நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இவ்வாறிருக்க கடந்த 25-09-2025 அன்றைய தினம் வியாழக்கிழமைமதியம் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் அவர்களிடம் கையளித்த மகஜரில் பல முக்கியமான வியங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன..

தயவுசெய்து மன்னார் காறாலை மின்சார உற்பத்தித் திடடத்தை உடன் நிறுத்தி மக்களிடம் பேசவும்.மக்களுடைய விருப்பத்திற்கும் உரிமைக்கும் எதிராக நீங்கள் செய்ய இருக்கும் நடவடிக்கைகளினால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், அழிவுகளுக்கும் நீங்களே பொறுப்பு கூற வேண்டி வரும்.

ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கும் வரை மக்கள் போராட்டமானது இலங்கை யாப்பிற்கும் சட்டத்திற்கும் உட்பட்டு முன்னெடுக்கப்படும்.எங்கள் புனித போராட்டமானது விரிவடைந்து செல்வது உங்களுக்கு தெரியும். அதை இன்னும் விரைவாக எமது நாடு பூராவும் விரிவுபடுத்த உள்ளோம்.

ஜனாதிபதி அவர்களினால் தரப்பட்ட ஒரு மாத கால வேலை நிறுத்தத்தை கவனிப்பதற்கு ஒரு குழு உங்கள் தலைமையில் உருவாக்கப்பட்டது.உங்கள் குழுவானது அந்த பகுதியில் நடந்த வேலைகளை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

இலங்கை மின்சார சபையானது பாரிய வேலைகளை முன்னெடுத்துள்ளது.தரப்பட்ட கடிதங்கள் தெளிவில்லை ஏமாற்றப் படுகின்ற விதத்தில் அமைந்துள்ளது.

எனவே தயவு செய்து உடனடியாக மக்களின் வாழ்வினையும் வளத்தையும் பாதுகாக்க நடவடிக்கை மேற் கொள்வதை எதிர்பார்க்கின்றோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் பாரிய இயந்திர உபகரணங்களும் தூண்களும் காற்றாடிகளின் உபகரணங்களும் மன்னரை நோக்கி பாரிய வாகங்களில் கொண்டுவரப்பட்டன. எனவே மக்கள் அவற்றிக்கு எதிராக வீதிகளில் நின்று போராடினார்கள். ஆனால், அநுரவின் அரசாங்கமும் அதன் ஏவல்நாய்களாக உள்ள பொலிஸ் படையும் போராட்டக்காரர்களை தாக்கியும் கைது செய்தும் மக்கள் போராட்டத்தை மழுங்கடிக்க முனைகின்றன என்ற செய்தி புலம்பெயர்ந்த நாடுகளில் உள் ஊடகங்களுக்கும் வந்து சேர்ந்தவண்ணம் உள்ளன.

மன்னாரில் 26ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் இரவு முதல் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களை பொலிஸார் கொடூரமாக தக்கிய

நிலையில் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த பொது மக்கள் அவசர அம்புலன்ஸ் சேவை ஊடாக மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் பொலிஸார் தங்கள் மீது உள்ள குற்றத்தை மறைக்கும் விதமாக பொதுமக்கள் மீது பல்வேறு விதமான பொய்யான வழக்குகளை தொடுத்து அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் மும்முறமாக ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மேலும் போராட்டத்தில் முன்னின்று செயற்படும் சமூக செயற்பாட்டாளர்கள் சிலரை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்து வருகின்றனர். ஜனநாயக ரீதியாக நடைபெற்ற போராட்த்தில் அரஜகமாக மக்களை தாக்கியது மாத்திரம் இல்லாமல் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் பெலிஸார் மேற்கொண்டுள்ளமை மன்னார் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில் அமைதியான மக்கள் போராட்டத்தில் பெண்கள், மதகுருக்கள், பொதுமக்கள் மீது கண் மூடித்தனமான தக்குதலை மேற்கொண்ட பொலிஸார் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை போராட்டகுழு முன்னெடுக்கவுள்ளதுடன் மனித உரிமை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் முறைப்பாட்டு பிரிவிலும் முறைப்பாடு மேற்கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே நாம் இந்த மாதத்தின் தேசக்குரலின் மூலம் எமது குரலையும் எழுத்துக்களையும் மன்னார் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகப் பதிவு செய்கின்றோம். இலங்கையின் முன்னைய பாசிச அரசாங்களைப் போலல்லாது தற்போதைய தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையில் மக்களின் குரல்களுக்கு மதிப்பளிக்கும் என்று எதிர்பார்த்து காத்திருந்த வேளையில் அந்த அரசாங்கத்தை தெரிவு செய்த மக்களையும் அவர்கள் சார்ந்த அமைப்புக்களையும் ஏமாற்றிவிட்டது என்ற விசனத்தோடு மக்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது உலகெங்கும் உள்ள இலங்கையர்கள் அனைவரும் மன்னார் மக்களிலின் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் வலுப்பெற்று வருகின்றன. ஆனால் வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரையும் இந்த போராட்டங்களில் காணவில்லை. அவர்கள் மக்கள் பக்கம் இல்லை. ஆட்சி செய்யும் "மன்னர்களின்" பக்கம் தான் எப்போதும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

## FEDERATION OF GLOBAL TAMILS அமைப்பு நடத்தும் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு இன்று 10ம் திகதி ஸ்காபுறோ பல்கலைக் கழக வளாகத்தில் சீரான திட்டமிடலுடனும் உணர்வுபூர்வமாகவும் ஆரம்பமாகின்றது

நாளை சனிக்கிழமை இந்த மாநாடு தொடர்ந்து அதே இடத்தில் நடைபெறும். இரண்டு நாட்களும் தமிழர் தாயகத்தின் மக்களின் வாழ்வு மேம்பாடு அடைய தேவையான திட்டங்களை தீட்டுவது தொடர்ந்து அவற்றை நடைமுறைப்படுத்துவது போன்ற விடங்களில் உரைகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியன இடம்பெறும். தொடர்ந்து 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ கொன்வென்சன் விழா மண்டபத்தில் கலந்துரையாடல் மற்றும் இராப்போசன விருந்து ஆகியன இடம்பெறும்.

மேலதிக விபரங்களுக்கு 416 473 5348 அல்லது 416 669 6437 அல்லது 416 888 1128 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.

உலக செய்திகள்
World News



# விஜய் மீது எங்களுக்கு எந்த வன்மமும் இல்லை என்கிறார் தொல். திருமாவளவன்

உச்சநீதிமன்றத்திலும் சனாதன சக்திகளின் கொட்டம் தலைவிரித்தாடுகிறது என்று திருமாவளவன் கூறினார்.

கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேரின் படங்களுக்கு சென்னை அசோக் நகரில் உள்ள விசிக அலுவலகத்தில் அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் அஞ்சலி செலுத்தினார்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் திருமாவளவன் கூறியதாவது: விஜய் மீது எங்களுக்கு எந்த வன்மமும் இல்லை. அவரை கைது செய்ய வேண்டும் எனவும் நாங்கள் வலியுறுத்தவில்லை. நடந்த சம்பவத்திற்கு விஜய் தார்மீக பொறுப்பு ஏற்க வேண்டும் என்றுதான் விமர்சனம் செய்து வருகிறோம். தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் இந்த விவகாரத்தில் திருப்தி அளிக்கிறது. பாஜக, அதன் கூட்டணி கட்சிகள்தான் இதில் அரசியல் செய்கின்றன. விஜய்யை கையில் எடுக்க பாஜக பகீரத முயற்சிகளை மேற்கொள்கிறது. சதிகார, சூழ்ச்சிகார அரசியல் சக்திகளிடம் சிக்கினால் அவர் இதுபோன்ற பல நெருக்கடிகளை சந்திக்க நேரும் விஜய் சுதந்திரமாக சிந்தித்து செயல்பட வேண்டுமென்பது தான் என் வேண்டுகோள். உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் மீதான தாக்குதல் முயற்சியை விசிக மிக வன்மையாக கண்டிக்கிறது. உச்சநீதிமன்றத்திலும் சனாதன சக்திகளின் கொட்டம் தலைவிரித்தாடுகிறது என்பதற்கு இந்த நிகழ்வு சான்று ராகேஷ் கிஷோரை சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.



# உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மீது தாக்குதல் நடத்தியமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கண்டனம்

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் அவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம், முழு நாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதாக எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் மீது வழக்கறிஞர் ஒருவர் காலணியை வீச முயற்சித்துள்ளார். அவரை காவலர்கள் பிடித்து இழுத்து சென்றனர். இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், இதுபோன்ற சம்பவங்கள் என்னை பாதிக்காது என்று கூறியுள்ளார். மேலும், அனைத்து மதங்களையும் மதிப்பவன் நான் என்றும் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் கூறியுள்ளார். விஷ்ணு சிலை புதுப்பிப்பு குறித்த வழக்கை விசாரித்த போது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கூறிய கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த வழக்கறிஞர், இத்தகைய செயலில் ஈடுபட்டதாக சொல்லப்படுகிறது. சனாதனத்தை அவமதிப்பதா? என உச்சநீதிமன்ற நீதிபதியை நோக்கி அந்த வழக்கறிஞர் கூச்சலிட்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்த நிலையில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்துக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது: "உச்சநீதிமன்ற வளாகத்திற்குள், இந்திய தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம், முழு நாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. புனித இடமான நீதிமன்றத்தில் எந்த வகையான வன்முறையும் ஏற்றுக்கொள்ள முடியாது. பரபரபரப்புக்கு மத்தியில் நீதிபதி கவாய் ஆற்றிய அமைதியான மற்றும் கண்ணியமான பதில், அவரது நேர்மை, தைரியம் மற்றும் நமது அரசியலமைப்பின் கொள்கைகளில் அவர் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கைக்கு ஒரு சான்றாக நிற்கிறது." இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# போர் நிறுத்த திட்டத்தை விரைவாக செயல்படுத்த வேண்டும் என இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பிற்க்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் வலியுறுத்தல்



இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசாமுனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சித்து வரும் அமெரிக்க அதிபர் டிரம்ப் 20 அம்ச திட்டத்தை சமீபத்தில் பரிந்துரைத்தார். இதை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி இஸ்ரேல் பிணைக்கைதிகளை விடுவிப்பது உள்ளிட்ட சில பரிந்துரைகளை ஹமாஸ் ஏற்றுக்கொண்டது. மற்ற பரிந்துரைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக தெரிவித்தனர். இதற்கிடையே பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க இஸ்ரேலும் ஒப்புக்கொண்டது. இரு தரப்பும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தை செயல்படுத்த தயாராகி வருகின்றன.

இது தொடர்பாக இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பு பிரதிநிதிகள் இடையே இன்று எகிப்தில் பேச்சுவார்த்தை நடக்கிறது, இதில் அமெரிக்க பிரதிநிதியாக ஸ்டீவ் விட்காப் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் போர் நிறுத்த திட்டத்தை இருதரப்பும் விரைவாக செயல்படுத்த வேண்டும் என்று டிரம்ப் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப் பதாவது: இந்த வார இறுதியில், ஹமாஸ் அமைப் பினர் வசம் உள்ள பிணைக்கைதிகளை விடுவிப்பது, காசாவில் போரை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து மிகவும் முக்கியமான விவாதங்கள் நடந்து உள்ளன. இந்த பேச்சுவார்த்தைகள் மிகவும் வெற்றிக்கரமாகவும், விரைவாகவும் நடந்து வருகின்றன.

மேலும் அனைவரும் விரைவாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நூற்றாண்டு பழமையான மோதலை நான் தொடர்ந்து கண்காணிப்பேன். நேரம் மிகவும் முக்கியமானது. இதில் விரைவாக இல்லையென்றால் யாரும் பார்க்க விரும்பாத பெரிய ரத்தகளரி தொடர்ந்து விடும் என்று கூறியுள்ளார்.

# இத்தாலியில் நிகழ்ந்த கார் விபத்தில் நான்கு இந்தியர்கள் உயிரிழப்பு




ஐரோப்பாவில் அமைந்துள்ள நாடு இத்தாலி. இந்நாட்டின் பசிலிக்காடா மாகாணம் மடிரா நகரில் உள்ள சாலையில் கார் சென்றுகொண்டிருந்தது. அந்த காரில் இந்தியர்கள் உள்பட 10 பேர் பயணித்தனர். இந்நிலையில், ஸ்கென்செனோ ஜொனிகா என்ற பகுதியில் சென்றபோது சாலையில் வேகமாக வந்த லோரி, கார் மீது மோதியது. இந்த கோர விபத்தில் காரில் பயணித்த 4 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

மேலும், 6 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த விபத்து தொடர்பாக காவல்துறை விசாரணை நடத்தி வருகின்றனர். அதேவேளை, விபத்தில் உயிரிழந்த மனோஜ் குமார் (வயது 34), சுரஜ் சிங் (வயது 33), ஹர்வீந்தர் சிங் (வயது 31), ஜஸ்கரன் சிங் (வயது 20) ஆகிய 4 பேரின் உடல்களையும் இந்தியாவுக்கு கொண்டு வர வெளியுறவுத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

# "நான் ஒரு நடிகையாக அறியப்பட விரும்புகிறேன்" என்கிறார் அக்சரா



கமல்ஹாசன் தொகுத்து வழங்கிய பிக் பாஸ் ஷோ மூலம் பிரபலமானவர் அக்சரா ரெட்டி. சமீபத்தில் வெளியான "ரைட்" படத்தின் மூலம் இவர் தமிழில் கதாநாயகியாக அறிமுகமானார்.

இந்த நிலையில், அவர் சில சுவாரசியமான விஷயங்களைப் பகிர்ந்துள்ளார். அவர் கூறுகையில், "என் அம்மா இறந்த பிறகு, சினிமாதான் எனக்குப் பிடிச்ச ஒரே துறைன்னு முடிவு பண்ணிட்டேன். காலேஜ் முடிச்சதும் ஜார்ஜியா போய் சைக்காலஜி படிச்சேன். எனக்கு தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் சரளமா பேசத் தெரியும். ரைட் படம் மூலமாதான் நான் தமிழில் கதாநாயகியாக அறிமுகமானேன். பில் கேட்ஸ் என்ற கன்னடப் படத்தில் நான் ஏற்கனவே கதாநாயகியாக நடிச்சிருந்தேன். நான் கவர்ச்சிக்காக இல்லாமல் ஒரு நடிகையாக அறியப்பட விரும்புகிறேன்" என்றார்.

# அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாண தலைநகரமான சிட்னியில் வீதியில் சரமாரி துப்பாக்கிச் சூடு நடத்தியவர் கைது




அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தின் தலைநகரம் சிட்னி. அங்குள்ள பரபரப்பான ஒரு தெருவில் மக்கள் சென்று கொண்டிருந்தனர். அப்போது 60 வயது மதிக்கத்தக்க முதியவர் திடீரென சரமாரி துப்பாக்கி சூடு நடத்தினார். இதில் அங்கிருந்த பேருந்து நிலைய கண்ணாடி உடைந்தது. இதனை கண்டதும் அங்கிருந்தவர்கள் அலறியடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர். இந்த தாக்குதலில் 12 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. அவர்கள் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையே அங்கு விரைந்த காவல்துறை அந்த முதியவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மன்னாரில் குறித்த 14 காற்றாலை களையும் அமைப்பதே அரசாங்கத்தின் முடிவாக உள்ளது

## - நான் அங்கு எந்தவித ஒப்பந்தங்களையும் செய்யவில்லை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்




- எஸ்.ஆர்.லெம்பேட் (09-10-2025)

ஜனாதிபதியை சந்தித்து மன்னார் மக்கள் ஏன் காற்றாலை வேண்டாம் என்று கூறுகிறார்கள் என்பதை தெளிவு படுத்தினேன். எனினும் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்த 14 காற்றாலை களையும் மன்னார் தீவில் அமைப்பதிலே மிகவும் திடமாக இருக்கிறார்கள் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் 9ம் திகதி அன்று வியாழக்கிழமை மாலை சர்வமத குழு, பொது அமைப்புக்கள், போராட்டக்குழு ஆகியோருடன் நடைபெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் ஜனாதிபதியை சந்தித்தேன். இதன் போது காற்றாலை தொடர்பான எமது பிரச்சனையை அவரிடம் முன் வைத்தேன். ஜனாதிபதியை சந்திப்பதற்கு நான் அரச அதிபரோடு இணைந்து இந்து மற்றும் இஸ்லாமிய மத குருக்களையும் அழைத்துச் செல்வதாக இருந்தோம்.

ஆனால் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான் ஜனாதிபதியை மூன்றாவது தடவையாக சந்தித்தேன். முதல் தடவையாக தனியாகவும், இரண்டாவது தடவையாக ஆயர் மன்றத்துடன் இணைந்து சென்று சந்தித்தோம்.

இந்த பிரச்சினையை நான் இலங்கை ஆயர் மன்றத்திற்கும் எடுத்துச் சொன்னேன். இலங்கை ஆயர் மன்றம் எங்களுடன் இணைந்து செயல்பட்டார்கள். கருதினால் முன்னெடுப்பாலும் ஆயர் மன்ற தலைவர் ஆகியோரினால் உடன் முன்னெடுக்கப்பட்ட சந்திப்பிற்கும் சென்றேன்.

இறுதியாக கடந்த 2 தினங்களுக்கு முன் ஜனாதிபதியை தனியாக சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அனைவரோடும் இணைந்து செல்வதாக இருந்தும் அந்த செயல்பாடு எனக்கு கைகொடுக்கவில்லை.

இருந்தும் நான் தனியாக சென்று குறித்த விடயம் குறித்து கதைத்த போது அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்றால் அவர்கள் குறித்த 14 காற்றாலை கலையும் மன்னார் தீவில் அமைப்பதிலே மிகவும் திடமாக இருக்கின்றார்கள்.

நான் அங்கு எந்தவித ஒப்பந்தங்களையும் செய்யவில்லை.நான் எங்களுடைய மக்களின் நிலைப்பாட்டையும்,மன்னாரில் ஏன் காற்றாலை வேண்டாம் என்று மக்கள் கூறுகிறார்கள் என்ற நிலைப்பாட்டையும் ஜனாதிபதிக்கு தெளிவு படுத்தினேன்.

எனினும் அவருடைய நிலைப்பாடு என்னவென்றால் குறித்த 14 காற்றாலை களையும் அமைத்ததன் பின்னர் மன்னாரில் கனிய மணல் அகழ்வையோ அல்லது மேலதிக காற்றாலை களையோ ஒரு போதும் அனுமதிப்பதில்லை என்ற வாக்குறுதியை அவர் மீண்டும், மீண்டும் கூறினார்.

கணிய மணல் அகழ்வு மன்னாரில் முற்றாக இல்லை என்பதை ஜனாதிபதி உறுதிப்படுத்தினார்.

அமைச்சரவை ஊடாக அதனை எமக்கு உறுதிப்படுத்தி தருவதாகவும் குறித்த 14 காற்றாலைகளையும் மக்கள் அனுமதிக்கின்ற போது எந்த ஒரு அரசாங்கமும் இச் சிறிய தீவில் கணிய மணல் அகழ்வு மற்றும் மேலதிக காற்றாலை அமைத்தல் போன்ற செயல்பாடுகளுக்கு அனுமதிக்கப் போவதில்லை. அதற்கும் அமைச்சரவை ஊடாக உறுதிமொழி வழங்குவேன் என கூறினார்.

எது எப்படியாக இருந்தாலும் நான் மன்னாரில் மக்களை சந்தித்ததன் பிற்பாடு இதற்கான நடவடிக்கையை எடுக்கலாம் என்று கூறி விட்டு அங்கிருந்து வந்தேன்.நாங்கள் எவ்வித ஆவணத்திலும் கையொப்பம் இடவில்லை.

எனினும் உண்மைக்கு புறம்பான செய்திகள் இணைய ஊடகங்களில் வெளி வந்துள்ளது.

நான் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. தாங்களாகவே ஊகித்து வெளியிட்ட செய்தியாக அமைந்துள்ளது. போராட்டத்தில் ஈடுபடுகின்றவர்களுடனும், மக்களுடனும் இன்னும் கலந்துரையாட வேண்டி உள்ளது. அதன் பின்னர் நாங்கள் ஒரு நிலைப்பாட்டிற்கு வருவோம்.என மேலும் தெரிவித்தார்.






இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஊழல் அரக்கனை வெற்றிகரமாக எதிர்த்து போராடிய அநுரகுமார அரசாங்கத்தின் ஒரு வருட பயணத்தின் பூர்த்தி



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க செப்டெம்பர் 21 அன்று ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்போது ஆட்சியில் முதல் ஆண்டை நிறைவு செய்கிறார். முந்தைய ஜனாதிபதிகள், குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ உட்பட்டவர்கள் தங்கள் பதவியேற்பு ஆண்டு நிறைவைக் கொண்டாட கோடிக்கணக்கான பொதுப் பணத்தைச் செலவிடும் முன்னுதாரணத்தை நிறுவியுள்ளனர். ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதுவரை தனது முதல் பதவியேற்பு விழா குறித்து எதையும் அறிவிக்கவில்லை. அனுபவமற்ற ஜனாதிபதியும் அனுபவமற்ற பாராளுமன்றமும் நீண்ட காலம் நீடிக்காது என்று ஜனாதிபதியின் அரசியல் எதிரிகள் கூறி தங்களை தாங்களே திருப்திப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் ஆண்டு நிறைவைக் கொண்டாடவில்லை, ஏனெனில் இது தேவையற்ற செலவாகக் கருதப்படுகிறது. ஆனால் நாட்டின் வங்குரோத்து நிலைக்கு முக்கிய காரணங்களாக இருந்த ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் பாதாள உலகத்தின் செயற்பாடுகளை ஒழிப்பதில் இந்த அரசாங்கம் சிறப்பாகச் செயற்பட்டுள்ளது என்பது பொதுமக்களின் கருத்தாகும். நாடு வங்குரோத்தாவதற்கு அரசியல்வாதிகள் மக்களுக்குப் புரியாத காரணங்களை அப்போது கூறினர். ஆனால் இப்போது அதற்கான காரணம் ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் பாதாள உலகத்திற்கு இடையே உடைக்க முடியாத அரசியல் ஆதரவு வலையமைப்பு இருந்தது என்பவைதான் காரணம் என்பது புரிகிறது. நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து காப்பாற்றுவதில் ரணில் விக்கிரமசிங்க பெரும் பங்களிப்பு செய்ததாக நன்கு கற்றவர்கள்கூட கூறி வந்தனர். ஆனால் நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வருவதற்கு ரணில் முக்கிய காரணங்களில் ஒருவர் என்பதை யாரும் வலியுறுத்தவில்லை. நாட்டின் மக்கள், குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழே வசிப்பவர்கள், தங்கள் உயிரைப் பராமரிக்க இரத்தக் கண்ணீர் சிந்திய நேரத்தில், ரணில் விக்கிரமசிங்க தனது இரண்டு நாள் வெளிநாட்டுப் பயணத்திற்கு ஒன்றரை கோடி ரூபாய் செலவிட்டார் என்பது இப்போது தான் வெளிச்சத்திற்கு வந்து மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. "ஊழலுக்கு ஏழைகள் தான் பணம் செலுத்துகிறார்கள்" என்று போப் பிரான்சிஸ் கூறியது எவ்வளவு உண்மை என்பதை இங்கு நினைவு கூற வேண்டும்.



எனவே இந்த நாடு அபிவிருத்தியடைய வேண்டுமானால் முதன்மையான நடவடிக்கை ஊழலை ஒழிப்பதாகும். ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் பாதாள உலக நடவடிக்கைகள் நம் நாட்டின் கலாச்சாரமாக மாறிவிட்டாலும், இந்த அரசாங்கம் வங்குரோத்து நிலைக்கு மூல காரணமான ரணில் விக்கிரமசிங்க அல்லது மஹிந்த ராஜபக்ஷ மீது அல்லது அவர்களது குடும்பத்தினர் மீது கை வைக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் குதர்க்கமாக கூறி வந்தனர். அரசாங்கம் அவ்வாறு செய்யத் துணிந்தால், முழு நாடும் அரசாங்கத்திற்கு எதிராக பற்றி எரியும் என்று எச்சரிக்கை விடுத்தார்கள். ஆனால் உண்மையில் அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களைக் கைது செய்து தடுத்து வைத்தபோது, குறிப்பிடத்தக்க எதிர்ப்பைக் காட்டுவதற்குப் பதிலாக, மக்கள் அந்த நடவடிக்கைக்காக அரசாங்கத்தைப் பாராட்டினர். அபிவிருத்திப் பணிகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவமும் முன்னுரிமையும் நாட்டில் ஊழல் மற்றும் தொடர்புடைய பிற குற்றங்களை ஒழிப்பதற்கும் கொடுக்கப்படும் என்பதை ஜனாதிபதி நிரூபித்துள்ளார். வெளிநாட்டிலிருந்து அரசாங்கத்திற்கும் காவல்துறைக்கும் வெளிப்படையாக சவால் விட்ட பாதாள உலகக் கும்பல்கள் இப்போது தடுப்புக்காவலில் உள்ளதுடன் மற்றைய பாதாள உலகக் கும்பல்கள் மற்றும் அவர்களின் அரசியல் தொடர்புகள் பற்றிய அதிர்ச்சியூட்டும் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர். பாதாள உலக வலையமைப்பு இப்போது அதிர்வடைந்துள்ளது. பாதாள உலக அமைப்பு விரைவில் அல்லது காலப்போக்கில் முற்றாக ஒழிக்கப்படும் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது.

ஊழலை ஒழிக்க முடியாது என்ற கருத்து மக்களிடையே ஆழமாக வேரூன்றியிருந்தது. மேலும் இந்த விடயத்தில் மக்கள் ஆர்வம் காட்டாததால் அது ஊழல் வளர வழிவகுத்தது. "மக்களின் அலட்சியமே ஊழல் வளர சிறந்த விளை நிலமாகும்" என்று டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனலின் தலைவர் டெலியா ஃபெரீரா கூறியிருக்கிறார்.

ஊழலை ஒழிப்பதில் மக்கள் பங்களித்தால், தாங்கள் பாதுகாக் கப்படுவார்கள், குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கருத்தும் நம்பிக்கையும் மக்களிடையே படிப்படியாக வளர்ந்து வருகிறது. ஊழல் நமது கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்ட இந்த நாட்டில் இது மிகவும் பாராட்டக்கூடிய நேர்மறையான மாற்றமாகும். "ஒரு ஊழல் நிறைந்த அமைப்பை மாற்ற முடியும் என்பதில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்" திரும்பவும் அழுத்திக் கூறுகிறார் டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனலின் ஆரம்ப நிறுவுனர் பீட்டர் ஐஜென்.


முந்தைய அரசாங்கங்களால் முன்வைக்கப்பட்ட எந்தவொரு நல்ல கொள்கையையும் அல்லது நடவடிக்கையையும் மக்களும் அரசியல்வாதிகளும் ஒருபோதும் "ஒரு தேசிய கொள்கை அல்லது தேசிய நிகழ்ச்சி நிரலாக" பார்க்கவில்லை, மாறாக "அரசாங்க நிகழ்ச்சி நிரலாகவே" பார்த்தார்கள். இதற்குக் காரணம் கடந்த அரசாங்கங்களின் அணுகுமுறையும் அவர்களின் நடத்தையுமே ஆகும். எனவே அவர்கள் ஊழல் ஒழிப்பில் பங்களிக்க முன்வரவில்லை. ஆனால் இந்த அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட கிளீன் ஸ்ரீலங்கா கருத்தியல் ஊழலை ஒழிப்பதன் முக்கியத்துவத்தையும் அழுத்தமாக வலியுறுத்துகிறது. அதே வேளையில் அரசாங்கமும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த கருத்தியலை கடைப்பிடித்து முன்னுதாரணத்தைக் காட்டி வருகிறார்கள். எனவே இது ஒரு தேசிய நிகழ்ச்சி நிரல் அல்லது கொள்கையாகக் கருதப்பட வேண்டும். கிளீன் ஸ்ரீலங்கா என்பது அரசாங்கத்தால் மேலிருந்து கீழாக செயற்படுத்தப்பட வேண்டிய ஒரு திட்டம் மட்டுமல்ல, அது மக்களாலும் சமூகங்களாலும் கீழிருந்து மேல் வரை செயற்படுத்தப்பட வேண்டிய ஒரு திட்டமாகும்.

எனவே ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த மாதம் 21ஆம் திகதி முதல் ஒரு வாரத்திற்கு, மக்கள் அமைப்புகள், மத அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள், ஊழலை ஒழிப்பதன் முக்கியத்துவம் மற்றும் நெறிமுறை நடத்தையை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இவை கிளீன் ஸ்ரீலங்காக கருத்தியலின் முக்கிய அம்சங்களாகும். 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை என்பதால், மத நிறுவனங்கள் வெறும் வழிபாட்டிற்கு அப்பால் சென்று "நெறிமுறை நடத்தையின் முக்கியத்துவத்தைப் பற்றி மக்களுக்குத் தெரிவிக்கலாம். உண்மையில் நெறிமுறை நடத்தை என்பது ஒரு ஆன்மீகக் கருத்தாகும். செப்டெம்பர் 21ஆம் திகதி சர்வதேச சமாதான தினமாகவும் கருதப்படுகிறது. தோட்ட கிராம கல்வி அபிவிருத்தி அமைப்பு - பிரிடோ நிறுவனம் (PREDO) கிளீன் ஸ்ரீலங்கா கருத்தியலை ஒரு தேசிய வேலைத் திட்டமாகப் பார்க்கிறது. மலையக பெருந்தோட்ட மக்கள் மத்தியிலும் ஊழல் எதிர்ப்பு உணர்வு கட்டியெழுப்பப்பட வேண்டும் என பிரிடோ கருதுகிறது. தோட்ட மற்றும் கிராமப்புறங்களில் பணி புரியும் ஒரு சிவில் சமூக அமைப்பு என்ற வகையில் PREDO அதன் கிராம அபிவிருத்திக் குழுக்கள், பெண்கள் மற்றும் இளைஞர் அமைப்புகளை "ஊழலை ஒழித்தல் மற்றும் நெறிமுறை சமூகத்தை உருவாக்குதல்" என்ற சுலேகத்தை பரப்புவதற்கும் 21 ஆம் திகதி தொடங்கி ஒரு வாரத்திற்கு தொடர்புடைய செயற்பாடுகளை நடத்துவதற்கும் அணிதிரட்டும். கிளீன் ஸ்ரீலங்கா கருத்தியலின் நான்காவது அம்சமான சுற்றாடல் நிலைபேறான தன்மை என்ற விடயத்திற்கும் முக்கியத்துவம் அளித்து சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடும். அதே நேரத்தில், அக்கரப்பத்தனை பகுதியில் உருவாக்கப்பட்ட பெண்கள் குழு கிளீன் ஸ்ரீலங்கா கருத்தியலை அதன் யாப்பின் ஒரு பகுதியாக உள்ளடக்க திட்டமிட்டுள்ளது. மேலும் நாட்டின் பொதுத் தேர்தல் முறையைப் பின்பற்றி பெண்கள் குழு உத்தியோகத்தரை தேர்ந்தெடுக்க இந்த மாதம் 21ஆம் திகதி ஒரு ஜனநாயகத் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இவை அனைத்தும் நமது சமூக கலாச்சாரத்திலிருந்து ஊழலை ஒழிக்க முடியும் என்ற கருத்தையும், அடிமட்டத்திலிருந்து ஒரு "நெறிமுறை சமூகத்தை" முறையாக உருவாக்க முடியும் என்ற கருத்தையும் பரப்பும் முயற்சியின் ஒரு பகுதியாகும். கிளீன் ஸ்ரீலங்கா கருத்தியலை விசேடமாக ஊழல் ஒழிப்பில் அரசாங்கமும் அரசாங்க அதிகாரிகளும் மட்டுமல்ல, "இந்த நாட்டின் ஒவ்வொரு அடிமட்ட அமைப்பும், ஒவ்வொரு தனிநபரும் பங்களிக்க முடியும், பங்களிக்க வேண்டும். நாட்டின் எதிர்கால சுபீட்சத்துக்கு இது மிகவும் அவசியமாகும். இறுதியாக, பத்மே அமிதாலர் ஸ்டார் வார்ஸ் என்பவரின் கூற்றை உங்களுக்கு நினைவூட்டி முடிக்கிறேன்.

ஊழலை ஒழிக்க பாடுபடுபவர்கள், அது சாத்தியம் என்பதை நம்புபவர்கள், இன்னும் நம்மிடையே இருக்கிறார்கள் என்பது தான் ஒரு நம்பிக்கை தரும் செய்தி.


**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் பலஸ்தீன் காசா 3 வருட நினைவாக இன அழிப்புக்கு நியாயம் கோரி பலஸ்தீன கொடிகளுடன் கவனயீர்ப்பு நடைபயணம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் பாலஸ்தீனம் காசா யுத்தத்தின் மூன்று வருட நினைவு நாளை முன்னிட்டு இன அழிப்புக்கு நியாயம் கோரியும் தனி நாடாக பிரகடனப்படுத்தி கோரி 1245வது நாள் நியாய பயணத்தின் ஊடாக பலஸ்தீன கொடிகளை ஏந்தியவாறு பெண்கள் 7ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள செபஸ்தியார் ஆலயத்தில் இருந்து காந்தி பூங்கா வரையும் கவனயீர்ப்பு நடைபயணம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள செபஸ்தியார் ஆலயத்தில் இருந்து காந்தி பூங்கா வரையும் நீதி நியாயம் கோரி தொடர்ந்து 1245 வது நாள் நியாய பயணம் என்ற தொனிப்பொருளில் அநீதிகள் படுகொலைகளுக்கு எதிரான சுலோகங்கள் ஏந்தியவாறு பெண்கள் அமைப்பு நடைபயணம் மேற்கொண்டு வருகின்றது.





இந்த நிலையில் அன்று பாலஸ்தீனம் காசா யுத்தம் தொடங்கி மூன்று வருட நினைவை முன்னிட்டு பெண்கள் நியாய பயணம் அமைப்புடன் கல்லடி பாலத்துக்கு அருகே உள்ள செபஸ்தியார் ஆலயத்தில் முன்னாள் பெண்கள் ஒன்று சேர்ந்தனர்.



இதனையடுத்து 77 வருடங்களாக பலஸ்தீனம் உன்னை புதைக்க முயற்சித்துள்ளனர் மீண்டும் மீண்டும் நீ சாம்பலில் இருந்து பீனிக்ஸ் பறவையாய் எழுவாயாக, உப்பில்லா உணவு போல பலஸ்தீனம் இல்லாத நாடு முழுமை அற்றதாகவும் சுவையற்றதாகும் இருக்கும், ஆற்றில் இருந்து கடல் வரை பலஸ்தீனம் விடுதலையாகும் என சுலோகங்களை கழுத்தில் தொங்க விட்டவாறு அங்கிருந்து காந்தி பூங்கா வரையும் நடைபயணமாக சென்றடைந்தனர்.

அதனை தொடர்ந்து அங்குள்ள காந்தி சிலையில் காந்தியின் மேல் பலஸ்தீன அடையாளம் கொண்ட துணியால் அவரது உடலை போர்த்து கொண்டதுடன் தலைக்கு மேல் குடை ஒன்றை பொருத்திய பின்னர் யுத்தத்தின் வேதனை அறிந்தவர்கள் நாம். இந்த வேதனை எங்கும் தொடரக்கூடாது, நாளைய மழலைகள் பலி ஆகக் கூடாது என்பதே எமது வேண்டுதல். எங்கேயோ கேட்ட வை என குரல் எழுப்பிக் கொண்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



# மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.யு.டி கினிகே கடமையை பொறுப்பேற்றார்



மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய உதவி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட டபிள்யூ.யு.டி கினிகே தனது கடமைகளை 7ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை சம்பிரதாயபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

மாவட்டத்தில் உதவி பொலிஸ் மா அதிபராக கடமையற்றிவந்த எம்.என்.எஸ். நுவான்மெண்டிஸ் இடமாற்றம் பெற்று சென்றதையடுத்து இந்த வெற்றிடத்துக்கு புதிய உதவி பொலிஸ் மா அதிபராக டபிள்யூ.யு.டி கினிகே நியமிக்கப்பட்டார்.

இதனையடுத்து அவர் இன்று தனது கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்ன தலைமையில் இடம்பெற்றது இதில் 15 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் உட்பட அதிகாரிகள் பங்குபற்றினர்.

இதன் போது அவருக்கு பொலிஸ் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டு சர்வ மதங்களைச் சேர்ந்த குருமார்களின் ஆசீர்வாதத்துடன் அவர் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.


# Thana Insurance Inc

**T20 INSURANCE**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

**PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

**NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

**20 YEARS TERM - NON MEDICAL INSURANCE**

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.


Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100%
ONLINE SERVICES,24/7."

# மருத்துவர் மனோகரனும் ஜனா தீர்மானமும்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



மருத்துவர் மனோகரன் அண்மையில் லண்டனில் உயிர் நீத்தார். அவர் யார் என்றால், "ரிங்கோ 5" என்று அழைக்கப்படுகின்ற, திருகோண-மலை நகரில் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களில் ஒருவரின் தந்தை.

திருகோணமலையில் மக்கள் அதிகம் வாழும் மையமான ஒரு பகுதியில், 2006ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாந்திகதி இந்த ஐந்து மாணவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்ட தனது மகனுக்காக இறக்கும் வரை மனோகரன் போராடினார். அவர் அணுகாத மனித உரிமை அமைப்பு இல்லை. ஐநா மனித உரிமைகள் பேரவை வரை அவர் போனார். ஆனால் அவருக்கு இறக்கும் வரை நீதி கிடைக்கவில்லை.

இடையில் 2015இல் ரணில் மைத்திரி அரசாங்கத்தின் காலத்தில், அதாவது நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட அரசாங்கத்தின் காலத்தில், அதைவிட குறிப்பாக ஐநாவின் வார்த்தைகளில் சொன்னால், நிலைமாறு கால நீதிக்குரிய - பொறுப்புக் கூறலுக்குரிய - தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய அரசாங்கத்தின் காலத்தில், குற்றஞ் சாட்டப்பட்ட அதிரடிப் படையினர் சிலர் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். அதற்குப்பின் யாரும் தண்டிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

மருத்துவர் மனோகரன் உயிர் பிரியும் வரை போராடினார். அவருடைய ஏனைய பிள்ளைகளுக்கும் அவருக்கு ஆபத்து வந்தபோது நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்தார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் அவரை நினைவு கூரும் ஒரு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு செம்மணி வளைவில் "அணையா விளக்கு" போராட்டத்தை ஒருங்கமைத்த "மக்கள் செயல்" என்ற அமைப்பு அந்த நிகழ்வை ஒழுங்கு படுத்தியது.

அது ஒரு நினைவு கூரலாகவும் அதேசமயம் நீதிக்கான மக்களின் போராட்டம் தொடர்பான ஆய்வு அரங்காகவும் அமைந்தது. அதில் அரசியல் விமர்சகர்களும் அரசியல்வாதிகளும் உரையாற்றினார்கள். குறிப்பாக அதில் உரையாற்றிய கஜேந்திரகுமார், மருத்துவர் மனோகரன் தொடர்பான தனது நினைவைப் பகிர்ந்து கொண்டார்.

லண்டனில் இருந்து மனோகரன் கஜேந்திரகுமாருடன் கதைப்பதற்கு தொலைபேசியில் அழைத்திருக்கிறார். ஆனால் கதைக்கத் தொடங்கியதும் அழத் தொடங்கிவிட்டார். கிட்டத்தட்ட அரை மணி நேரம் அவர் அழுதிருக்கிறார். அதன் பின்னர் சுதாகரித்துக் கொண்டு சிறிது உரையாடியிருக்கிறார். அவரை மீண்டும் ஐரோப்பிய நாடு ஒன்றில் சந்தித்ததாக கஜேந்திரகுமார் தனது உரையில் கூறினார். அச்சந்திப்பின் போதும் கிட்டத்தட்ட அரை மணித்தியாளத்துக்கு மேலாக மருத்துவர் மனோகரன் அழுதிருக்கிறார்.

அன்றைய நிகழ்வில் அவருடைய மார்பளவு உருவப்படம் பெருப்பிக்கப்பட்டு மேடையில் வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கண்கள், துக்கமும் விரக்தியும் நிறைந்த கண்கள் அங்கே வந்திருந்த எல்லாரையும் உற்றுப் பார்ப்பது போல இருந்தது.

அந்த நிகழ்வு நடந்த அடுத்த நாள் திங்கட்கிழமை ஜெனிவாவில் அறுபதாவது மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பு இன்றி அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எந்த நாடும் அதை எதிர்த்து வாக்களிக்கவில்லை.

அந்தத் தீர்மானம் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போல நீர்த்துப்போன ஒரு தீர்மானமாகக் காணப்படுகிறது. வழமை போல அதில் மாகாண சபைத் தேர்தல்களை வைக்க வேண்டும், 13ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் போன்ற திரும்பத் திரும்ப வரும் விடையங்கள் உண்டு. அது போலவே போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பும், அரச படைகளும் விடுதலைப் புலிகள் இயக்கமும் பொறுப்புக் கூற வேண்டும், விசாரிக்கப்பட வேண்டும் என்ற விடயமும் அதில் உண்டு.

கடந்த 16 ஆண்டுகளாக மனித உரிமைகள் பேரவையில் இதுதான் நடந்து வருகிறது. இரண்டு தரப்பையும் விசாரிக்க வேண்டும், 13ஐ முழுமையாக அமல்படுத்தி மாகாண சபைகளை இயங்க வைக்க வேண்டும். இந்தக் கோரிக்கைகள் திரும்பத் திரும்ப முன்வைக்கப்படுகின்றன. அதே சமயம் புதிய ஆட்சிகள் வரும் பொழுது குறிப்பாக ராஜபக்சக்கள் இல்லாத ஆட்சிகள் வரும்போது அவற்றை அரவணைத்துப் பொறுப்புக்கூற வைக்கலாம் என்று ஐ நா முயற்சித்து வருகிறது. இம்முறை தீர்மானமும் அந்த நோக்கத்திலானதுதான்.

ஆனால் அரசாங்கம் தெளிவாகக் கூறுகிறது, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைதான் உண்டு. வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று. அதேசமயம் ஏற்கனவே 2021ஆம் ஆண்டிலிருந்து ஒரு பன்னாட்டுப் பொறிமுறை மனித உரிமைகள் ஆணையாளருடைய அலுவலகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஸ்ரீலங்காவை பொறுப்புக் கூற வைப்பதற்கான அலுவலகம் என்று அழைக்கப்படும் அந்தக் கட்டமைப்பானது கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரித்து வருகிறது. அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டுக்குள் வந்து விசாரணைகளை செய்து சான்றுகளையும் சாட்சிகளையும் உறுதிப்படுத்துவதற்கு இதுவரையிலும் இருந்த எந்தவொரு அரசாங்கமும் விசா வழங்கவில்லை கடந்த ஓராண்டு காலமாக அநுர அரசாங்கமும் விசா வழங்கவில்லை.



அதேசமயம் உள்நாட்டுப் பொறி முறையைப் பொறுத்தவரையிலும் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட ரிங்கோ 5 என்று அழைக்கப்படுகின்ற ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவமும் உட்பட இன்றுவரையிலும் நடந்த எத்தனை படுகொலைகளுக்கு நீதி கிடைத்திருக்கிறது? கடந்த சுமார் 30க்கும் மேற்பட்ட ஆண்டு காலப் பகுதிக்குள் மாணவி கிருசாந்தியின் கொலை வழக்கில்தான் குற்றவாளிகள் ஓரளவுக்காவது தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் ஒரு குற்றவாளி இன்றுவரை தலைமறைவாக இருக்கிறார். மற்றொரு குற்றவாளியாகிய லான்ஸ் கோப்ரல் சோமரட்ன ராஜபக்ஷ அக்குற்றங்களில் தனக்குச் சம்பந்தமில்லை என்றும், தனக்கு மேலதிகாரிகள் இட்ட கட்டளைகளையே தான் நிறைவேற்றியதாகவும் பகிரங்கமாகக் கூறி வருகிறார். இன்றைக்கு நேற்றைக்கு அல்ல, கடந்த 20 ஆண்டுகளாக அவர் அவ்வாறு கூறி வருகிறார். அவர் தனது வாக்குமூலத்தில் பெயர் குறிப்பிட்டிருக்கும் அதிகாரிகள் யாரும் இதுவரையிலும் விசாரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அநுர அரசாங்கம் கடந்த ஓராண்டு காலப் பகுதிக்குள் 80க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்திருக்கிறது. இவர்களில் தரைப்படை, கடற்படை பிரதானிகள், போலீஸ் அதிகாரிகள், உயர் அதிகாரிகள், பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்கள் என்று பல வகையினரும் அடங்குவர். ஆனால் கைது செய்யப்பட்ட படைத்தரப்பைச் சேர்ந்த யாருமே இன முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்படவில்லை. ஆனால் அவர்களில் சிலர் மீது இன முரண்பாடு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்டு.

உதாரணமாக ஒரு கடற்படைப் பிரதானி மீது அவ்வாறான குற்றச்சாட்டு உண்டு. ஆனால் இன்றுவரை அரசாங்கம் கைது செய்திருக்கும் எந்த ஒரு படைத் தரப்பைச் சேர்ந்தவர் மீதும் இன முரண்பாடு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படவில்லை. அரசாங்கம் அந்த விடயத்தில் மிகத் தெளிவாக இருக்கிறது.

ஆனால் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை மூலம் உண்மையைக் கண்டடையலாம், அரசாங்கத்தைப் பொறுப்புக் கூற வைக்கலாம் என்று ஐநா நம்புகின்றதா? கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானம் அதைத்தான் பிரதிபலிக்கின்றது.

திங்கட்கிழமை மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முதல் நாள் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடந்த மனோகரன் நினைவு நிகழ்வில் பேசியவர்களில் ஒருவர் திருக்கோணமலையைச் சேர்ந்த ரஜீவ் காந்த். அவர் ஓர் அரசியல் செயற்பாட்டாளர். தென்னிலங்கையில் நடந்த "அரகலய" தன்னெழுச்சிப் போராட்டங்களில் காணப்பட்ட தமிழர்களில் முக்கியமானவர்.


இவர் மருத்துவர் மனோகரனின் மகனின் பாடசாலையில் சமகாலத்தில் படித்தவர். அந்த ஐந்து மாணவர்களும் கொல்லப்பட்ட சம்பவத்தில் மயிரிழையில் உயிர் தப்பியவர். அந்த மாணவர்கள் வழமையாக ஒரு சிமெண்ட் கட்டில் உட்கார்ந்திருந்து கதைப்பதுண்டாம். அவர்களோடு சேர்ந்து இருந்திருக்க வேண்டிய ரஜீவ் அன்றைக்கு வேறொரு அலுவல் காரணமாக அங்கே வரப் பிந்திவிட்டது. அதற்குள் எமன் அவரை முந்திக் கொண்டு விட்டான்.

அந்த நினைவு நிகழ்வில் பேசும் பொழுது அவர் சொன்ன பல விடயங்களில் ஒன்று அந்த ஐந்து மாணவர்களில் ஒருவராகிய யோகராஜா ஹேமச்சந்திராவின் மூத்த சகோதரனைப் பற்றியது. கொல்லப்பட்ட தனது தம்பியின் பூத உடலை அழுதழுது தூக்கி கொண்டு வரும் அவருடைய அண்ணனை இப்பொழுதும் அதில் சம்பந்தப்பட்ட ஒளிப்படங்களில் காணலாம் என்று ரஜீவ் சொன்னார். ஆனால் அந்த அண்ணனும் இப்பொழுது இல்லை.

ஹேமச்சந்திரனின் மூத்த சகோதரன் திருக்கோணமலையில் இயங்கிய "அக்சன் பெய்ம்" (Action Against Hunger) என்று அழைக்கப்படுகின்ற பிரான்ஸை மையமாகக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனத்தில் வேலை செய்தவர். நாலாம் கட்ட ஈழப் போரின் தொடக்க நாட்களில் அந்த நிறுவனத்தைச் சேர்ந்த பதினேழு உள்ளூர் ஊழியர்கள் வரிசையாக உட்கார வைக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஹேமச்சந்திரா கொல்லப்பட்ட ஐந்தே மாதங்களில் அவருடைய அண்ணனும் மூதூரில் தனது சக ஊழியர்களோடு கொல்லப்பட்டு விட்டார். அந்த குடும்பத்துக்கு ஐந்து மாதங்களில் இரண்டு இழப்பு.

அந்தக் குடும்பத்தில் அடுத்தடுத்த நிகழ்ந்த இரண்டு இழப்புக்கும் இன்றுவரையிலும் நீதி கிடைக்கவில்லை. ஆனால் ஐநாவும் பெரும்பாலான உலக நாடுகளும் நம்புகின்றனவா, உள்நாட்டு விசாரணை பொறிமுறை ஒன்றின் ஊடாக இலங்கையில் நிலைமாறு கால நீதியை நிலைநாட்டலாம் என்று?

ஞாயிற்றுக்கிழமை தந்தை செல்வா கலையரங்கில் கூடிய கருத்தரங்கில் பேசிய யாருமே உள்நாட்டு விசாரணை வழிமுறையை ஏற்றுக் கொள்ளவும் இல்லை நம்பவும் இல்லை. அவர்கள் பேசிக் கொண்டிருந்த மேடையில் பின்னணியில் நிறுத்தப்பட்டிருந்த மருத்துவர் மனோகரனின் கண்கள். அழுதழுது களைத்துப் போன அந்த விழிகள் அங்கிருந்து எல்லாரையும் உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தன.




# தமிழர்களின் போராட்டங்கள் மனித உரிமை பேரவையில் வெறும் பிம்ப நிகழ்வுகளாக மாறியுள்ளதை நாம் அவதானிக்க வேண்டும்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கடந்த 16 ஆண்டுகளாக மனித உரிமை பேரவையின் பக்க அறைகளில் நடைபெறும் “பக்க நிகழ்வுகள்” தமிழர்களால் எந்தப் பயனும் இல்லை. என்பதை உலகெங்கும் வாழும் நம் தமிழ் மக்கள் அறிந்தும் தெரிந்தும் தெளிந்தவர்களாய் அவற்றின் பயன்கள் என்ன என்பதை பார்க்கவேண்டும். இந்நிகழ்வுகள் ஊரை, உலகத்தை, இறுதியில் சொந்த மக்களையே ஏமாற்றும் நிகழ்வுகளாக மாறியுள்ளன.

புகைப்படங்கள் எடுத்து சமூக வலைத்தளங்களில் “பெரிய பிம்பங்கள்” என தங்களை காட்டிக்கொள்ளுவதற்கே இந்நிகழ்வுகள் பயன்படுகின்றன. மனித உரிமை பேரவையின் கட்டிடத்துக்குள் நுழைய என்.ஜி.ஓக்களின் ஆதரவை நாடி, அங்கு உள்ள உணவகங்களில் உணவுண்டு, வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் புகைப்படம் எடுத்து, துண்டுப் பிரசுரங்களை வழங்கி விட்டு வெளியேறுவதே இன்று தமிழர்களின் நிலையாகியுள்ளது.

இதனை மீறி யாரேனும் உண்மையான போராட்டத்தை வெளிப்படுத்த முயன்றால், அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களை உடனடியாக வெளியேற்றிவிடுகிறார்கள்.

*எழுதியவர்: ஈழத்து நிலவன்*

# போராட்டக்காலத்தில் மக்களை எழுச்சிகொள்ள வைத்த கலை, இலக்கியங்கள் இப்போது ஊமையாக இருப்பது வருத்தமளிக்கிறது

## பொ. ஐங்கரநேசன் ஆதங்கம்!





தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை, இலக்கியங்கள் அளப்பெரிய பணிகளை ஆற்றியிருக்கின்றன. போர்க்களத்தில் ஆயுதங்கள் பேசியபோது மக்கள் களத்தில் நின்று கலை, இலக்கியங்கள் பேசின, போராட்டங்களின் நியாயங்களையும், வலிகளையும் சொல்லி மக்களை எழுச்சிகொள்ள வைத்து அவர்களைத் தேசமாக ஒருங்கிணைத்ததில் கலை, இலக்கியங்கள் பெரும் பங்களிப்புகளைச் செய்தன. ஆனால், முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனித்ததோடு, எமது கலை, இலக்கியங்களும் மூச்சிழந்து விட்டன கலை, இலக்கியங்கள் பேசவேண்டிய விடயங்கள் இன்னும் ஏராளம் இருக்க, அவை ஊமையாக இருப்பது வருத்தமளிக்கிறது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும், “வேர்முகங்கள்” நூலின் ஆசிரியருமான பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பொ. ஐங்கரநேசன் கலை, இலக்கிய ஆளுமைகளுடன் நிகழ்த்திய நேர்காணல்களின் தொகுப்பான “வேர்முகங்கள்” நூலின் அறிமுகவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (05.10.2025) முள்ளியவளை பரி-மத்தியா ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் ஏற்புரை ஆற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதே தவிர, தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வரவில்லை. போராட்டம் முளை கொண்டதற்கான காரணங்கள் இப்போதும் அப்படியே நீடிக்கும்போது, போராட்டம் முடிவுக்கு வர இயலாது. அது சாத்தியமான வழிகளில் எல்லாம் ஜனநாயகப் போராட்டமாகத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, இப்போராட்டங்கள் இன்று அரசியல் வாதிகளுக்குரிய ஒரு பணி என்பதாக மாத்திரமே சுருங்கிப் போயுள்ளது. ஆயுதப் போராட்டத்தின் முடிவுடன் தமது பேனாக்களை மூடி வைத்துள்ள கலை, இலக்கியவாதிகள் ஜனநாயகப் போராட்டக்காலத்திலும் தமது பணிகளைத் தொய்வின்றித் தொடரவேண்டும்.

போராட்டக்காலத்தில் பேசாமடந்தைகளாக இருந்த பலர் இப்போது தமிழ்த்தேசிய வாதத்தைக் கேள்விக்குள்ளாக்கத் தலைப்பட்டுள்ளனர். இலங்கையில் இடதுசாரிகள் தலைமையிலான அரசாங்கம் அமைந்துள்ள நிலையில் அவர்கள் உயிர்பெற்றுள்ளனர்.

போருக்குப் பின்னரான எமது இளைய தலைமுறையைத் தமிழ்த்தேசிய உணர்வில் இருந்தும் மடைமாற்றி, பெருந்தேசிய வாதத்துக்குள் கரைக்கும் நிகழ்ச்சிநிரலை தெரிந்தோ தெரியாமலோ முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில், எமது போராட்டத்தின் நியாயங்களை, போரில் பெற்ற வெற்றிகளை, பட்ட வதைகளை எமது இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லுவது வரலாற்றுக் கடமையாகும். அதை எமது கலைஞர்களும் இலக்கியவாதிகளும் செய்ய முன்வரவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



# தொண்டமானாறு உவர்நீர்த் தடுப்பணையால் வெள்ளப்பாதிப்பனை எதிர்கொள்வோருக்கு தீர்வு முன்வைக்கப்படவேண்டும்

## ஆளுநரிடம் தவிசாளர் நிரோஷ் கோரிக்கை



தொண்டமனாறு உவர்நீர்த் தடுப்பணைத் திட்டத்தினை நாம் வரவேற்கின்றோம். அதேயிடத்தில் இத் திட்டத்தினால் வருடாவருடம் வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்ளும் மக்களை காப்பாற்றுவதற்கான நிலைத்தகு திட்டத்தினை மாகாண நிதி ஒதுக்கீடுகளுக்குள்ளாகவோ அல்லது சர்வதேச தாபனங்களின் ஒத்துழைப்புடனோ நிறைவேற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகத்திடம் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கோரிக்கை விடுத்தார்.

7-10-2025 அன்று செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த உள்ளுராட்சி மன்றத் தலைவர்களுக்கம் ஆளுநர் நா. வேதநாயகம் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இச் சந்திப்பிலேயே வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மேற்படி கோரிக்கையினை முன்வைத்தார்.

அவர் மேலும் யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கான பெரும் அர்ப்பணிப்பினை வலிகாமம் கிழக்குப் பிரதேசமே மேற்கொள்கின்றது. தொண்டமானாறு மற்றும் செம்மணி நீரேரிகள் எமது ஆட்சிப் பகுதிக்கு உட்பட்டவை. நிலத்தடி நீரைப்பாதுகாப்பதற்கான உவர் நீர்த்தடுப்புத் திட்டம் இங்கு செயற்படுத்தப்படுவதனால் எமது மக்களில் ஆயிரக்கணக்கானவர்கள் வெள்ளப்பாதிப்பினை எதிர்கொள்கின்றார்கள். அவ்வாறாக மக்கள் பாதிக்கப் படும் போதும் மக்களை நாம் நிலத்தடி நீர்ப்பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரே காரணத்திற்காக பாதிப்புக்களை சகித்துவாழ பல அரச கட்டமைப்பு கோருகின்றது.

நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் திட்டத்துடன் இணைந்த உப திட்டங்கள் வகுக்கப்பட்டு அதன்வாயிலாக மக்களை வெள்ளப்பாதிப்பில் இருந்து நாம் பாதுகாக்கவேண்டும். அவ்வாறான திட்டங்கள் நிலைத்தகு சிந்தனையுடன் நடைமுறைப் படுத்தப்படும் போது மக்கள் எதிர்கொண்டுள்ள வெள்ளப்பாதிப்பிற்கு தீர்வு காணலாம். ஒவ்வொரு வருடமும் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, ஆவரங்காலின் ஒருபகுதி, வாதரவத்தை, புத்தூர் கிழக்கு என வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் பல பகுதி வெள்ளப்பாதிப்பிற்கு உள்ளாகின்றது. இதில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடர் நிலையை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான நிலையில் மாகாண சபை கூட தனது குறித் தொதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்படி மக்களுக்கு சிறந்த திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தி மக்களின் பாதிப்புக்களைக் குறைக்கலாம். அதற்கு ஏனைய உள்ளுராட்சி மன்றங்களும் தமது பகுதிக்கும் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் திட்டம் நன்மையளிக்கின்றது என்ற அடிப்படையில் நிதிகள் மாகாண மட்டத்தில் பகிரப்படும் போது விட்டுக்கொடுப்புக்களைச் செய்யமுடியும். மேலும் உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச கொடையாளர்களிடம் மேற்படி உவர் நீர்த் தடுப்பணை நன்னீர்த்திட்டத்தினை பேணுவதனால் பாதிக்கப்படும் மக்களுக்கான பாதிப்பை நிவர்த்தி செய்யத்தக்க திட்டத்தினை மேற்கொள்ள நிதி கோரிக்கையினை ஆளுநர் அவர்கள் முன்வைக்க வேண்டும் என தவிசாளர் நிரோஷ் கோரிக்கை விடுத்தார்.

இதனைத்தொடர்ந்து கருத்தரைத்த ஆளுநர் நா. வேதநாயகம் அவர்கள் சர்வதேசத்திட்டங்களில் வாயிலாக பாதிக்கப்படும் மக்களை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் முறையான தேடுதல் ஆணை இல்லை

## பொலிசாரின் சட்ட முரணான செயற்பாடுகளை கண்டித்து சட்டத்தரணிகள் போராட்டம்!

பு. கஜிந்தன்

முறையான தேடுதல் ஆணை இல்லை - பொலிசாரின் சட்ட முரணான செயற்பாடுகளை கண்டித்து சட்டத்தரணிகள் போராட்டம்!

முறைப்படியான தேடுதல் ஆணை இல்லாது பொலிசார் முன்னெடுத்துவரும் சட்ட முரணான செயற்பாடுகளை கண்டித்து வடக்கின் சட்டத்தரணிகள் ஒரு நாள் பணிப் புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களை பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகளின் பிரசன்னத்துடன் குறித்த போராடம் யாழ்ப்பணத்தில் உள்ள நீதிமன்ற வளாகம் முன்னிலையில் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலை இடம்பெற்றது.

கடந்த 5 ஆம் திகதி முறையற்ற வகையில் காணி ஒன்றிற்கு உரிமம் ஏற்பாடு செய்துகொடுத்ததாக கூறி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடமையாற்றும் பெண் சட்டத்தரணி ஒருவரின் இல்லத்தில் அவரை கைது செய்யும் நோக்கில்



வீட்டிற்குள் நுழைந்த பொலிசார், குறித்த வீட்டில் சட்டத் தினால் வழங்கப்பட்ட அதிக-ாரம் எதுவுமின்றி தேடுதல் நடத்தும் தோரணையில் அச்சுறுத்தலாக யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலீசார் நடந்து கொண்டனர்.



குறித்த சட்டமுரணான செயற்பாடை கண்டித்து நடைபெற்ற போராட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சிரேஸ்ட சட்டத்தரணி திருக்குமரன் - குறித்த போராட்டம் சட்டத்தரணி மீது நடவடிக்கை எடுப்பதை கண்டிப்பதானதல்ல. சட்டம் அனைவருக்கும் பொதுவானது.

ஆனால் அந்த சட்டத்தை சரியான தேடுதல் ஆணை இல்லாது மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் குறித்த செயற்பாடு பொலிசாரின் அத்துமீறிய செயற்பாட்டையே காட்டுகின்றது.

எனவே சட்டத்தரணிகளுக்கு எதிராக அல்லாது பொதுமக்களுக்க எதிராக, பொலிசார் முன்னெடுக்கும் சட்ட முரணான செயற்பாடுகளை கண்டித்தே இன்று வடக்கின் சட்டத்தரணிகள் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவாக கிழக்கின் சட்டத்தரணிகளும் சில மணி நேரம் புறக்கணிப்பை செய்து எமது போராட்டத்தை வலுப்படுத்தினர். எனவே சட்டத்தை முன்னெடுக்க முனையும் பொலிசார் அதை சட்ட ரீதியாக முறையான வகையில் மேற்கொண்டு நீதியை வழங்க அல்லது குற்றவாளி என சந்தேகிக்கும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் வழங்கும் நீதி தூய நீதியாக இருக்காது என்கிறார் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன்!



இலங்கை அரசாங்கம் வழங்கும் நீதி திய நீதியாக இருக்காது - நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ். மண்டை தீவு பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் மனித எலும்பு கூடுகள் இருப்பதாக கூறப்படும் நிலையில் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் மூலம் வழங்கப்படும் நீதி அரச நீதியாக அமையுமே அல்லாமல் தூய நீதியாக அமையாது என அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்தார்.

கடந்த 6ம் திகதி திங்கட்கிழமை யாழ். தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மண்டைதீவு புதைகுழி என நம்பப்படும் கிணற்றின் மீது கட்டு கட்டி நினைவு சின்னம் ஒன்று வைக்கப்பட்டது அது பின்னர் உடைக்கப்பட்டது.

கேள்வி என்னவெனில் குறித்த துபி கட்டப்பட்டு ஓராண்டு காலப் பகுதியில் தமிழ் தரப்பை கட்டுப்படுத்திய தரப்பு ஏன் அதனை தோண்டி விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. அல்லது குறித்த கிணற்றை தோண்டுவதற்கு ஏன் பெரிதும் அக்கறை காட்டவில்லை. தற்போது அது தொடர்பில் வழக்கு போடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

அரசியலை அறிவியலாக பார்க்கும் போது 2009க்கு முன்னர் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக பதிலடி கொடுப்பதுதான் போராட்ட வடிவமாக காணப்பட்டது.

தமது மக்களை இன அழிப்பு செய்தவர்களை தண்டித்தார்கள். தண்டிக்கும் சக்தி அவர்களிடம் இருந்த நிலையில் மண்டைதீவு கிணற்று புதைகுழி தொடர்பில் சம்பந்தப்பட்டவரை அராலிப் பகுதியில் வைத்து தண்டனை வழங்கினார்கள்.

அன்றைய காலப் பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கொடூரங்களுக்கு இலங்கைக்குள்ளோ அல்லது சர்வதேச நீதிகளோ விசாரணைகள் தேவைப்படவில்லை. அவர்களே அதனை நிறைவேற்றினார்கள்.

அன்றைய தமிழ் மக்களின் போராட்ட வடிவம் அவலங்களை தந்தவர்களுக்கு அதையே திருப்பிக் கொடுப்பதாக இருந்தது. தண்டனை வழங்குவதை விட தண்டனை வழங்கும் பொறுப்பை அவர்களே எடுத்துக் கொண்டார்கள்.

2009க்கு பின்னர் எமக்கு எதிராக அநீதி இழைக்கிறவர்களுக்கு தண்டனை வழங்கும் சக்தி குறைந்தவர்களாகவும், போராட்ட பலம் குறைந்தவர்களாகவும் காணப்பட்டனர்.

தற்போது தமிழ் மக்கள் தமக்கு அநீதி இழைக்கப்படும் போது தனியாக அல்லது சிறு குழுவாக போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். அதற்கு பல உதாரணங்களை கூற முடியும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தமது உறவுகளை தேடி தாய் தந்தை சகோதரர்கள் தனியாகப் போராடி வருகிறார்கள். இந்தியாவில் சிறையில் தடுத்து வைக்கப்பட்ட பேரறிவாளரின் விடுதலைக்காக தாய் அற்புதாம்பாள் பல வருடங்களாக தனியாகப் போராட்டத்தை மேற்கொண்டார்.

ஆகவே ஒடுக்கப்பட்ட தமிழ் இனம் தமக்கான நீதியை பெற்றுக் கொள்ளும் இடமாக இலங்கை அரசாங்கத்தை நம்ப முடியாது. அவ்வாறு வழங்கப்படும் நீதி தூய நீதியாக இருக்க மாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகள் இறுதி யுத்தத்தில் மக்கள் இறப்பதை விரும்பவில்லை; இதற்கு நானே சாட்சி என்கிறார் கஜேந்திரகுமார் எம்பி !



புலிகள் இறுதி யுத்தத்தில் மக்கள் இறப்பதை விரும்பவில்லை; இதற்கு நானே சாட்சி என கஜேந்திரகுமார் எம்பி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதி யுத்தத்தில் கூட தமிழ் மக்கள் கொல்லப்படுவதை விரும்பவில்லை என்பதற்கு நானே சாட்சி என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதன் பின் ஏற்பட்ட படுகொலைகள் அனைத்திற்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என தெரிவித்தார்.

அண்மையில் தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 16 தொடக்கம் 18ஆம் திகதி வரையான காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் இருந்துள்ளனர்.

அவர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு அப்போதைய நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டில் இல்லாத நிலையில் பசில் ராஜபக்சவுடன் பேசுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் நடேசன் மற்றும் சமாதான செயலக பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோர் என்னுடன் பேசினார்கள்.

எமது கட்டுப்பாட்டில் உள்ள மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் அந்த செய்தியை உரிய தரப்பினரிடம் கொண்டு போய் சேர்க்குமாறு என்னிடம் கோரிக்கை முன்வைத்தார்கள்.

அதன் பிரகாரம் பசில் ராஜபக்சவிடம் குறித்த செய்தியை கொண்டு போய் சேர்த்தேன். 17 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ச நாட்டுக்கு வருகை தந்ததும் பாதுகாப்பு சபை கூட்டத்தில் நான் பேசிய விடயங்கள் தொடர்பில் இணங்கப்படும் என்றார்.

அந்த இணக்கப்பாட்டுடன், மறைந்த மன்னராயர் இராசப்பு யோ-சப் மற்றும் கிங்சிலி ஆகியோருடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு சென்று மக்களை அழைத்து வர முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயங்கள் மே மாதம் 16ஆம் திகதி இரவு 8 மணி அளவில் பேசப்பட்டது.

ஆனால் நிலைமைகள் மாறி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் இருந்த மக்களை இலங்கை இராணுவம் இனப்படுகொலை செய்தது.

இதற்கு நானே சாட்சி. விடுதலைப் புலிகள் இறுதி நேரத்தில் தான் என்னுடன் தொடர்பு கொண்டார்கள், ஏனெனில் அரசியல் கலக்காமல் சில விடயங்களை அவர்கள் கையாள முனைந்திருக்கிறார்கள் அது சாத்தியப்படவில்லை.

என்னிடம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க உரிய தரப்பினரிடம் விடயங்களை கொண்டு போய் சேர்த்தேன், ஆனால் கூறப்பட்ட விடயங்களுக்கு மாறாக இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.

இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால் புலிகள் இறுதி யுத்த களத்தில் கூட அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை விரும்பவில்லை.

அவர்கள் என்னுடன் பேசிய மே 16 அம் திகதி தொடக்கம் இறுதி யுத்த களத்தில் கொல்லப்பட்ட இலட்சக்கணக்கான பொதுமக்களுக்கு நானே சாட்சி என அவர் மேலும் தெரிவித்தார்.



2025 OCT 12
THANKS GIVING
LONG WEEKEND
SUNDAY @ 6 PM
Title Sponsor
Vijaya Jewellery
437-833-3197
647-329-3062
Markham & Steeles
EARLY BIRD TICKETS
$40
VIP $75
AT THE DOOR MORE
$50 & VIP $100
TMS Selvakumar
Playback Singer
Varsha S krishnan
Zee Tamil Title Winner
Ramu Maharajapuram
Playback Singer
நெஞ்சம் மறப்பதில்லை
Muisc Band
SEVENOTES
Evergreen night
SHIVAS CHICKEN
WHOLE SALE CANADA INC
416-910-3244
186 Bartley Dr. #12A, Toronto, ON
STANDARD MORTGAGES INC.
RAJ SUBRAYAM
Ocean Accounting Tax Consultants
Accounting Services for Personal and Smalll Business
Call us 416-285-6900
VIBRANT HOSPITALITY GROUP
KARIS EVENT PLACE
More Info :
416-564-9642
416-566-0790
55 Nugget Ave unit 10,
Scarborough, ON M1S 4L4
TICKET LOCATION
Scarborough
Cell Tell Mobility
2611 Eglinton Ave East
416-266-6818
Cell Tell Mobility
Birchmount Road / Finch
2950 Birchmount Rd Unit# 5C
(416) 495-7776
Kennedy & Ellesmere
Samy & Sons
416-298-1598
Ruby & Ruby Saree Palace Inc.
2843 Lawrence Ave Est
416-264-7833
Markham & Steeles
New Royal Fashions
416-519-1119
Vijaya Jewellery
3341 Markham Rd #127,
Scarborough, ON M1X 0A5
(437) 833-3197
New Spiceland
Supermarket Video
647-471-1810
Sprin Florist Canada
3011 Markham Rd
416-893-2624
Majestic City
Designs 2 Prints LTD
Tel: 647-858-2290
GTA Square Mall
Winners Lotto Centre
Tel: 416-291-9990
Eraa plaza (Neilson / Finch)
Sai Elanthulir Fashion
Jewellery & Money Transfer
Tel: 416-471-1002
Tapscott Rd / Finch ave
DTA Convenience
416-332-0961
5633 Finch Ave E units 5
Middlefield Rd & Steeles Ave
Pasumai Market
2-2002 Middlefield Rd,
Markham,
(905) 472-5525
Etobicoke (Kipling & Steeles)
A S A Financial Service
(in Uthayas Supermarket)
Tel:416-742-1425
AJAX (Harwood & Taunton Rd)
New Spiceland Restaurant
905-426-4445

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் வெற்றிகரமாக இயங்கும் கேதீஸ் அவர்களின் "தமிழாரம்" தொலைக் காட்சி நடத்திய "7 ஸ்வரங்கள்" பாடல் போட்டி முடிவுகள் பார்வையாளர்களின் பாராட்டுக்களைப் பெற்றன



பல்துறை வித்தகரும் சமூகப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருபவரும் கனடாவில் வெற்றிகரமாக ஊடகத்துறையிலும் இயங்கிவருபவருமான கேதீஸ் அவர்களின் "தமிழாரம்" தொலைக் காட்சி நிறுவனம் நடத்திய "7 ஸ்வரங்கள்" இளையோர் பாடல் போட்டி முடிவுகள் பார்வையாளர்களின் பாராட்டுக்களைப் பெற்றன.

கடந்த 4ம் திகதி சனிக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள "ஒன்றாரியோ தமிழிசைக் கலா மன்றத்தின்" கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி "7 ஸ்வரங்கள்" இளையோர் பாடல் போட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டியில் சிறப்புவிருந்தினர்களாகவும் சிறப்பு நடுவர்களாகவும் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த பிரபல பாடகர் "கலைமாமணி ராமு" மற்றும் பாடகி வர்ஷா ஆகியோரும் கனடா வாழ் பாடகி சிம்மை அவர்களும் பங்களித்தார்கள்.

இறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பெற்றவர்களிலிருந்து சிறந்த பாடல்களை நேர்த்தியாக பாடிய மூவருக்கு முறையே 1ம்-2ம்-3ம் இடங்கள் வழங்கப்பெற்று அவர்களுக்கு பெறுமதியான பரிசுப் பொருட்களும் பாராட்டுக்களும் வழங்கப்பெற்றன.









அன்றைய மேற்படி 7 ஸ்வரங்கள்" இளையோர் பாடல் போட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டியில் முதலாவது வெற்றியாளராக செல்வி சுயநித்தா சுயந்தன் அவர்களும், 2வது வெற்றியாளராக சியானி சுதாகரன் அவர்களும், 3வது வெற்றியாளராக சாய்லக்ஷ்மி சத்தியநாதன் அவர்களும், Social Media புகழ் பாடகியாக அன்றீனா கெங்காதரன் அவர்களும், Performer of Series: வெற்றியாளராக சந்தோஷ் குகன் அவர்களும், பாராட்டுக்களைப் பெற்ற பாடக பாடகிகளாக அக் ஷனா ஆரூரன், லக்ஷன் கெங்காதரன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.







மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் நகர சபை அங்கத்தவர் நீதன் சண்முகராஜா அவர்களும் அங்கு சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு விழாவை வாழ்த்திச் சென்றார்கள்.

நூற்றுக்கணக்கான பார்வையாளர்களும் பாடக பாடகிகளின் பெற்றோர்களும் சபையில் அமர்ந்த வண்ணம் தங்கள் ஆதரவை வழங்கினார்கள்









Carefirst Family Health Team

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




FEDERATION OF GLOBAL TAMILS
அனைத்துலக தமிழர் பேரவை

முதல் சர்வதேச ஆராய்ச்சி மாநாடும்
FGT யின் வருடாந்த விருந்தும்

OCT 10
5:30 PM to 10:00 PM
University of Toronto Scarborough

OCT 11
8:00 AM to 11:00 PM
University of Toronto Scarborough

OCT 12
5:30 PM to 11:30 PM
FGT Annual Dinner
Scarborough Convention Centre

Conference Entrance Free
Free Parking
FGT Dinner $100

First International Research Conference on the Prospects for Integrated Development of the North and East of Sri Lanka

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான வாய்ப்புகள் குறித்த முதல் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு

Conference Theme
On the Prospects for Integrated Development of the North and East of Sri Lanka and the Role of Diaspora

மாநாட்டின் கருப்பொருள்
இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கின் ஒருங்கிணைந்தவளர்ச்சிக்கான வாய்ப்புகள் மற்றும் புலம்பெயர் மக்களின் பங்கு

For further information visit our website
https://conference.tamilfederation.org
or email: communication@tamilfederation.org

416.473.5348

HSB CANADA

SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN



ஸ்கார்ப்ரோ & டெல்டா வில் மட்டும்

புரட்டாசி சனி

விரத சாப்பாடு

செப்டம்பர் 20, 27, அக்டோபர் 4 & 11, 2025

சிறப்பு உணவுகள்

- சூப்
- பிளைன் தோசை
- மிளகாய் பொடி தோசை
- பட்டர் தோசை
- நெய் தோசை
- மினி ஊத்தப்பம்
- இட்லி
- பூரி
- ரவா கிச்சடி
- மெது வடை
- ஆனியன் பக்கோடா
- அன்லிமிடெட் தோசை / பூரி / வடை
- நெய் பொங்கல்
- உருளைக்கிழங்கு மசாலா
- டிபன் சாம்பார்
- கலவை காய்கறி சாம்பார்
- தேங்காய் சட்னி
- ஸ்பெஷல் சட்னி
- சாப்பாடு
- ஸ்பெஷல் சாப்பாடு / நூடுல்ஸ்
- செஃப் ஸ்பெஷல் பிரியாணி
- சாம்பார் சாதம்
- தயிர் சாதம்
- காய்கறி கூட்டு
- காய்கறி பொரியல்
- ஸ்பெஷல் பொரியல்
- தந்தூரி கறி
- ஸ்பெஷல் குழம்பு
- ரசம்
- தயிர்
- பச்சடி
- அப்பளம்
- மோர் மிளகாய்
- ஊறுகாய்
- பாயசம்
- ரவா கேசரி
- பருப்பு பொடி
- நெய்

SCARBOROUGH 416 293 7755 | MISSISSAUGA 905 290 0769 | BRAMPTON 905 457 7575 | DELTA B.C 778 578 7575

# மரண அறிவித்தல்

தோற்றம்:
06 - 12 - 1939



மறைவு:
04 - 10 - 2025

## திருமதி. தர்மலிங்கம் இராசலட்சுமி

(நவிண்டில், Sri Lanka)

**யாழ். வடமராட்சி நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் இராசலட்சுமி அவர்கள் 04-10-2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் இராசம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா சின்னம்மா (சின்னன்) தம்பதிகளின் அருமை மருமகளும்,

தர்மலிங்கம் (சுப்பையா அன் சன்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும்,

யோகராணி (ராணி), யோகராஜா (யோகன்), யோகேஸ்வரன் (ஈசன் இலங்கை), யோகநாதன் (நாதன்), யோகநிதி (நிதி) ஆகியோரின் அருமைத் தாயாரும்,

காலஞ்சென்றவர்களான இராஜதுரை, இராசரத்தினம், மற்றும் இராஜேஸ்வரி, இராஜமணி, இராஜேந்திரம், இராஜயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

யோகேஸ்வரி (யோகம்) அவர்களின் அன்பு மைத்துனியும்,

சிவராஜா (சிவன்), சாந்தினி, சுகிர்தா, சத்தியகுமார் (சுரேஷ்) ஆகியோரின் அருமை மாமியாரும்,

கவினா நிதா, தக்சினி அபிநாத், ஜெனீஷா சாயீஷன், ஜெனுாஷன், அபிலாஷ், அகிலேஷ், அனுஷ்கா ஆகியோரின் அருமைப் பேத்தியும்,

ஷேலன், அத்தீனா, ஆதினி ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் *06-10-2025* திங்கட்கிழமை மாலை *5:00* மணி தொடக்கம் *9:00* மணிவரையும், *07-10-2025* செவ்வாய்க்கிழமை பி.ப. *2:00* மணி தொடக்கம் *3:00* மணிவரையும் Chapal Ridge Funeral Home & Cremation Centre இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னார் *07-10-2025* செவ்வாய்க்கிழமை பி.ப. *3:00* மணி தொடக்கம் *4:30* மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, *5:00* மணி தொடக்கம் *5:30* மணிவரை North Toronto Crematorium இல் தகனம் செய்யப்பட்டது.**

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**

**யோகன் - மகன்:** (416) 951-8173 | **நாதன் - மகன்:** (416) 319-0032

**சிவன் - மருமகன்:** (647) 504-9458 | **சத்தி (சுரேஷ்) - மருமகன்:** (416) 624-5044

**ஈசன் - மகன்:** +94766830158



# ஜெனீவாவில் தமிழரை தோற்கடித்த “தமிழ் வாக்குகள்”

***“மஹிந்த ராஜபக்ச, மைத்ரி - ரணில் நல்லாட்சி, கோத்தபாய ராஜபக்ச, ரணில் அரசு போன்றவற்றினால் ஜெனீவாவில் சாதிக்க முடியாத விடயத்தை தமிழ் மக்களின் பேராதரவோடு ஆட்சிபீடம் ஏறிய அநுரகுமார அரசு அந்த தமிழ் மக்களின் ஆதரவைக் காரணம் காட்டியே தனக்கு சாதகமாக சாதித்து தமிழர் தரப்புக்களை ஜெனீவா தீர்மானத்தில் மண் கவ்வ வைத்துள்ளது.”*** **------------------------------------------------------ கே.பாலா ---**

எதிரிகளை மன்னித்தாலும் துரோகிகளை மன்னிக்கக் கூடாது என்பது போரியல் மரபு. அது அரசியலுக்கும் சாதாரண வாழ்க்கைகவும் கூட நன்கு பொருந்தும். ஏனெனில் எதிரிகள் நேரில் மோதுவார்கள், துரோகிகள் கூட இருந்தே குழிபறிப்பார்கள், நம்பிக்கைத் துரோகம் செய்வார்கள். அவ்வாறான ஒரு நம்பிக்கைத் துரோகத்தைத்தான் தமிழ் மக்களின் பேராதரவு பெற்று ஆட்சிபீடம் ஏறிய தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. - தேசியமக்கள் சக்தி அரசும் தமிழ் மக்களுக்கு செய்யத் தொடங்கியுள்ளது.

மனித உரிமை மீறல்கள், ஆக்கிரமிப்புகள், அபிவிருத்திகள் அதாவது பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், பொருளாதாரம் தொடர்பில் இந்த அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. - தேசியமக்கள் சக்தி கூட்டணி நியாயமாக செயற்படுமென வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை நம்பியே தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரையும் புறக்கணித்து அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாக்களித்து வரலாற்று வெற்றியை பெற்றுக்கொடுத்ததுடன் பாராளுமன்றத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து 7 தமிழ் மக்கள் பிரதிநிதிகளையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஆனால் அநுரகுமார அரசு மனித உரிமை மீறல்கள் விடயத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மூடி மறைத்து ஜெனீவாவில் தமிழ் மக்களை, அவர்களின் நீதி கோரலை தோற்கடித்து ஜெனீவா தீர்மானத்தை வலுவிழக்க வைத்து நிறைவேற்றி கடந்த அரசுகளை விடவும் தமிழ் மக்களுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அடுத்ததாக ஆக்கிரமிப்பு விடயத்தில் மன்னாரில் காற்றாலை மின் திட்டத்தை அமைத்தே தீருவது என்பதில் விடாப்பிடியாக நிற்பதுடன் மக்களின் பெரும் போராட்டங்களையும் பொலிஸ் காட்டு மிராண்டித்தனத்தால் அடக்கி, தாக்கி தனது இனவாத முகத்தைவெளிப்படுத்தியுள்ளது .அடுத்ததாக அபிவிருத்தி விடயத்தில் வடக்கில் பெரும் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுவதாக காட்டிக்கொண்டு பிரதான அபிவிருத்திகளை செய்ய முடியாதென அரசு பகிரங்கமாகவே அறிவித்து. தமிழர் தேசத்தை அபிவிருத்தியில் முடக்கியுள்ளது. புறக்கணித்துள்ளது.

இதில் பொறுப்புக்கூறல் விடயத்தில் கடந்த எந்த அரசுகளும் ஜெனீவாவில் பெறாத வெற்றியை இம்முறை அநுரகுமார அரசு பெற்றுள்ளது என்றே கூற வேண்டும்.ஏனெனில் ஜெனீவாவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கை தொடர்பில் 2012 இல் இருந்து இதுவரை நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானங்கள் அனைத்தையும் விட மிகவும் மோசமான, பலவீனமான ஒரு தீர்மானமாகவேயுள்ளது. இந்த ஜெனீவாத் தீர்மானம் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா. செய்கின்ற அடிப்படை துரோகமாக உள்ள நிலையில் அநுரகுமார அரசு சர்வதேச ரீதியில் பெற்ற பெரு வெற்றியாகவும் உள்ளது.

அதுமட்டுமன்றி இலங்கை தொடர்பான பிரேரணையில் “இனப்பிரச்சினை” என்ற பதம் நீக்கப்பட்டுள்ளது தமிழர்களுக்கு விழுந்த பேரிடியாகவும் சிங்களதேசத்திற்கு பெரு வெற்றியாகவும் உள்ளது. அநுரகுமார அரசின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்த “இனப்பிரச்சினை” என்ற பதம் நீக்கப்பட்டுள்ளது என்பது தான் இங்கு முக்கியம். “இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கைக்கு ஆதரவான ஏனைய சில நாடுகளின் வேண்டுகோளுக்கு அமைவாகவே “இனப்பிரச்சினை” எனும் சொல்லுக்குப் பதிலாக “மோதல்” எனும் பதம் சேர்க்கப்பட்டது” என இணையனுசரணை நாடுகளுக்குத் தலைமை வகிக்கும் பிரிட்டன் விளக்கமளித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த செப்டம்பர் 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இக்கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணையனுசரணை நாடுகளால் “இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்” எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் முதலாவது வரைவு கடந்த மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதனையடுத்து அப்பிரேரணை தொடர்பில் கடந்த மாத நடுப்பகுதியில் நடைபெற்ற உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற இலங்கையின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினர், தமது மாற்று அபிப்பிராயங்களை முன்வைத்தனர். அதன் பிரகாரம் இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளின் புதிய பிரேரணை முதலாம் கட்ட மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, திருத்தங்கள் உள்வாங்கப்பட்ட பிரேரணை கடந்த மாத இறுதியில் வெளியிடப்பட்டது. அத்திருத்தப் பிரேரணையில் “மோதல்கள்” எனும் சொல்லின் மூலம் “இனப்பிரச்சினை” என்ற சொற்பதம் பதிலீடு செய்யப்பட்டிருந்ததுடன், சர்வதேச மனிதாபிமானச்சட்டத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட சட்டவாதியின் பங்கேற்புடனான பிரத்யேக நீதித்துறைப் பொறிமுறையொன்றை நிறுவுவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தவேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்த விடயம் முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுபற்றி இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் மற்றும் ஜெனிவாவில் உள்ள பிரித்தானிய பிரதிநிதிகளிடம் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் கேட்ட போது அதற்குப் பதிலளித்த அப்பிரதிநிதிகள் பிரேரணையில் “இனப்பிரச்சினை” எனும் சொல்லுக்குப் பதிலாக “மோதல்கள்” என்ற பதத்தைப் பயன்படுத்துமாறு இலங்கை அரசாங்கமும், இலங்கைக்கு ஆதரவான வேறு சில நாடுகளும் தம்மிடம் கோரியிருந்ததாகத் தெரிவித்துள்ளனர். அத்தோடு பிரேரணையில் சொற்பதங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பினும், அவை பிரதிபலிக்கும் பொருளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்றும் அவர்கள் விளக்கமளித்துள்ளனர்.

ஆக கடந்த மஹிந்த ராஜபக்ச அரசு, மைத்ரி - ரணில் நல்லாட்சி அரசு, கோத்தபாய ராஜபக்ச அரசு, ரணில் அரசு போன்றவற்றினால் சாதிக்க முடியாத இந்த விடயத்தை தமிழ் மக்களின் பேராதரவோடு ஆட்சிபீடம் ஏறிய அநுரகுமார அரசு அந்த தமிழ் மக்களின் ஆதரவைக் காரணம் காட்டியே தனக்கு சாதகமாக சாதித்து தமிழர் தரப்புக்களை ஜெனீவாவில் மண் கவ்வ வைத்துள்ளமை, ஜெனீவா தீர்மானத்தை நீர்த்துப்போக வைத்தமை என்பது தமிழ் மக்கள் அநுரகுமார அரசிடம் பொல்லுக்கொடுத்து அடி வாங்கியது போன்றும் தமிழர்களின் விரலை வைத்தே அரசு அவர்களின் கண்களை குத்தியது போன்றுமே உள்ளது.

அடுத்தது மன்னார் காற்றாலை மின்திட்ட பிரச்சினை. கடந்த அரசினால் இந்திய அதானி நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்திற்கு எதிராக மன்னார் மாவட்ட மக்கள் தொடர்ந்தும் போராடி வரும் நிலையில் அந்த மக்களின் கடும் எதிர்ப்புக்களையும் மீறி போராட்டங்களையும் கவனத்தில் எடுக்காது போராடியோர் மீது பொலிஸாரைக் கொண்டு கடும் தாக்குதல்களை மேற்கொண்டும் போராட்டக்காரர்களை கைது செய்தும் நீதிமன்றங்களுக்கு அழைத்தும் அச்சுறுத்தி அந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் அநுரகுமார அரசு தீவிரமாகவுள்ளது. தமிழர் பகுதிகளில் எந்த வித ஆக்கிரமிப்புக்களும், தமிழர்கள் விரும்பாத எந்தவொரு அபிவிருத்திகளும் இடமபெறாது என அநுரகுமார அரசு கொடுத்த வாக்குறுதிகளை மீறி முன்னெடுக்கப்படும் ஒரு நம்பிக்கைத் துரோக நடவடிக்கையாகவே இது உள்ளது.

அடுத்ததாக அபிவிருத்தி. எந்த மாகாணத்தையும் விட போரினால் மோசமாக பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதிலேயே முனைப்புக்காட்டுவதாகவும் அதற்காக பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அரசு படம் காட்டினாலும் அங்கு சிறு சிறு அபிவிருத்திகள் மட்டுமே முன்னெடுக்கப்படுவதுடன் கண்டிப்பாக அபிவிருத்தி செய்ய வேண்டிய இடங்களை அபிவிருத்தி செய்ய முடியாதென இந்த அரசு வெளிப்படையாகவே கூறி தமிழர் எந்த தேவைக்கும் தென்னிலங்கையையே நம்பியிருக்க வேண்டும் என்ற பேரினவாத சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளது.

பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி ஆகிய இரண்டையும்- நான்கு மாதத்திற்குள் நிறைவு செய்துகாட்டுவோம் என்று அன்று அறிவித்த அரசு இன்று இவை இரண்டையும் அபிவிருத்தி செய்ய மாட்டோம் என அறிவித்துள்ளது. அண்மையில் யாழ்ப்பாணம் சென்ற போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவே அங்கு இந்த பகிரங்க அறிவிப்பை விடுத்தார். அதனை பின்னர் அவர் பாராளுமன்றத்திலும் அதனை உறுதிப்படுத்தினார்.


இது தொடர்பில் அவர் பாராளுமன்றத்தில் கூறுகையில் “காங்கேசன்துறை துறைமுகத்தை அண்மித்த கடற்பகுதி 10 மீற்றர் - 12 மீற்றர் வரை ஆழ பரப்பைக் கொண்டுள்ளதுடன் அந்த ஆழத்தை மேலும் அதிகரிப்பதற்கு அதிக நிதியை செலவிட வேண்டும். இந்த துறைமுகத்துக்கான எதிர்கால கேள்வி மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு ஆகியவற்றை கவனத்திற் கொள்ளும் போது காங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக மாற்றியமைப்பது பொருளாதாரத்துக்கு வினைத்திறனானதாக அமையாது” என்கிறார். இந்தக் காங்கேசன்துறை துறைமுகத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கு இந்திய அரசாங்கம் 63 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வழங்கியும் கூட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா இதனை நிராகரித்திருக்கின்றார். தற்போது காங்கேசன்துறை துறைமுகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் அதற்கான அடிப்படை விடயங்களைக் கூட செய்வதற்கு அமைச்சர் மறுக்கின்றார்.

அத்துடன் நிபுணத்துவ திட்டமிடலுக்கு அமைய பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படுமே தவிர அரசியல்வாதிகளின் நோக்கங்களுக்காக அல்ல” என்றும் கூறினார். அதாவது இந்திய உதவி திட்டங்களுடன் வடக்கை அபிவிருத்தி செய்து சர்வதேசத்திற்கும் குறிப்பாக இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையிலான போக்குவரத்து மையமாக வடக்கைமாற்றுவதற்கு அரசு விரும்பவில்லை என்பதுதான் அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் இந்த அறிவிப்பின் அடிப்படை அர்த்தம். பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தால் அது கட்டுநாயக்காவுக்கு நிகரான ஒன்றாக மாறிவிடும் அதனால் வடக்கின் பொருளாதாரம் மேம்படும். அதேபோல காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால் யாழ்ப்பாணம் மேம்பட்டு விடும் உற்பத்திப் போக்குவரத்துக்கு அது மையமாகிவிடும் தமிழர் பிரதேசம் அபிவிருத்தியடைந்து விடும் என்ற பேரினவாத சிந்தனைதான் அமைச்சரின் இந்த அறிவிப்பு.

வடக்கு, கிழக்கிலே எவ்வித பொருளாதார மேம்பாட்டு விடயங்களும் கட்டியெழுப்பப் படக்கூடாது, வடக்கு, கிழக்கு மக்கள் அனைத்து விடயங்களுக்கும் தென்னிலங்கையை நம்பி, தென்னிலங்கை அரசை மாத்திரம் நம்பி வாழ வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு இனவாதமான மனநிலையிலேயே இந்த அரசாங்கமும் செயற்படுகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக் கூறல் விடயத்திலும் நல்லிணக்கம் சம்பந்தமான விடயத்திலும் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விடயத்திலும் தமிழ் மக்களுக்கு இந்த அநுரகுமார அரசாங்கம் துரோகமே செய்துள்ளது என்பதற்கான 3 உதாரணங்களே இவை.

இலங்கையில் ஒரு அரசியல் “மாற்றம்” வேண்டுமென எதிர்பார்த்து ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. ஆகியவற்றின் தலைவரான அநுரகுமார திசாநாயக்காவுக்கு 56,34,915 வாக்குகளை வழங்கி ஜனாதிபதியாக்கி பெருமைப்பட்டதுடன் அவரது கட்சி நாட்டை ஆழ பாராளுமன்றத்துக்கான தேர்தலில் 68,63,186 வாக்குகள் மூலம் 159 பாராளுமன்ற ஆசனங்களை வழங்கி அழகுபார்த்த மக்களில் வழக்கத்தை விட இம்முறை அதிக பங்களிப்பு செய்த சிறுபான்மையினத்தவர்களான தமிழ் மக்கள், நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி மக்களுக்கு புதிய திசைகாட்ட வந்த அநுரகுமார அரசால் ஏமாற்றப்படும் துரோகம் செய்யப்படும் நடவடிக்கைகளே “தமிழ் மக்களின் ஆதரவு” என்ற முகமூடியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# தமிழகத்தின் இருள்: சினிமா கவர்ச்சியில் உறைந்த அரசியல் சிதைவு: நிறுவனமயமான ஊழல் சங்கிலியும்




திரைப்பட நடிகர் விஜய்யின் கூட்டத்தில் ஏற்பட்ட கரூர் பெருந்துயரம் (27.09.2025 அன்று 41 பேர் உயிரிழந்த சம்பவம்), தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் ஒரு அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியிருக்கிறது. இச்சோகமான நிகழ்வு, ஒருபுறம் திரைக் கதாநாயகன் மீதான வெறித்தனமான மோகத்தின் உச்சத்தையும் மறுபுறம், திராவிடக் கழகங்களின் ஊழல் சாம்ராஜ்ஜியத்தையும் ஒரே நேரத்தில் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது. இந்த இரு அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த வரலாற்றுச் சிதைவே இன்றைய தமிழ்நாட்டின் யதார்த்த நிலையாகும்.

## நிறுவனமயமான ஊழல்: கழக ஆட்சிகளின் மறைமுக வரி வருவாய்

தமிழகத்தின் பிரதான சக்திகளான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் ஊழல் கட்சிகளே, அவற்றின் ஆட்சிகள் ஊழல் ஆட்சிகளே என்ற உண்மை, தலைவர்கள் ஒருவருக்கொருவர் சாடும் விவாதங்களிலேயே வெளிப்படுகிறது.

(அ). இலஞ்சத்தின் பரிணாமம்: மறைமுக வரி போல் கையூட்டு

ஊழல் என்பது வெறுமனே தனிப்பட்ட இலஞ்சம் அல்ல் அது, அரசின் வருவாயைப் போல் மறைமுகமாக வசூலிக்கப்படும் ஒரு நடைமுறையாகவே நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது.

- சர்க்காரியா முதல் 40% சூத்திரம் வரை: கருணாநிதியின் தி.மு.க. ஆட்சியில் நேரடியாக இலஞ்சம் பெற்றதாகச் சர்க்காரியா ஆணையம் விசாரிக்கப்பட்டாலும், ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சி இலஞ்சத்தை அரசின் மறைமுக வரி வருவாய்போல் மாற்றியது. அரசின் ஒப்பந்தப் பணிகளில், மொத்தத் தொகையில் 40% வரை கையூட்டாகப் பெறப்படும் என்ற நுட்பமான முறை செயல்படுத்தப்பட்டது.

- பங்கீடு மற்றும் நீடிப்பு: இந்த 40% கையூட்டு, முதலமைச்சர், அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் எனப் பல அடுக்குகளில் பிரித்துக் கொள்ளப்பட்டது. ஒப்பந்தத்தின் தரத்தைக் கேள்விக்குள்ளாக்காமல் இருக்க, அதன் குறைந்தபட்ச மதிப்பீட்டுத் தொகை உயர்த்தப்பட்டது. பின்னர் ஆட்சிக்கு வந்த கருணாநிதியின் தி.மு.க. ஆட்சியும் இதே சூத்திரத்தைப் பின்பற்றிச் செயல்படுத்தியது. இது, இரு கழகங்களிலும் ஊழல் ஒரு நிறுவனமயமாக்கப்பட்ட, தொடர்ச்சியான செயல்பாடு என்பதைக் காட்டுகிறது.

- சிறு ஊழல்களின் சங்கிலி: டாஸ்மாக் கடைகளில் இரசீது இல்லாமல் ரூ.10 வசூலிப்பது, நெல் கொள்முதலில் ஒரு மூட்டைக்கு ரூ.40 வசூலிப்பது, பல்கலைக்கழகத் துணைவேந்தர் நியமனங்களில் நடக்கும் கையூட்டுகள் என அரசின் ஒவ்வொரு அடுக்கிலும் ஊழல் சங்கிலி நீள்கிறது.

(ஆ). ஊழலின் "சனநாயகப்படுத்தல்" மற்றும் வருவாய் மாவட்டங்கள்

தற்போதைய தி.மு.க. ஆட்சியில் ஊழல் மேலும் "சனநாயகப் படுத்தப்பட்டுள்ளது".

- கழக மாவட்டங்கள் உருவானதன் ரகசியம்: அரசு வரையறுத்துள்ள ஒரு மாவட்டத்திற்குள் வடக்கு, தெற்கு, நகரம் என்று பல "கழக மாவட்டங்கள்" உருவாக்கப்படுவதற்கு அடிப்படைக் காரணம், அரசு ஒப்பந்தப் பணிகள் மூலம் வரும் "வருவாயை" ஆளுங்கட்சிப் பிரமுகர்களிடையே சமமாகப் பங்கிடுவதற்கான ஆளுங்கட்சியின் "வருவாய்" மாவட்டப் பிரிவினையே ஆகும். இது உட்கட்சிச் சிக்கல்களைத் தீர்க்கும் பெயரால், அதிகாரத்தைக் கொண்டு கொள்ளை அடிக்கும் முறையை மேலும் பரவலாக்குகிறது.

- மக்கள் மௌனத்தின் உளவியல்: ஒப்பந்தக்காரர்கள் ஏரி, குளம், காடுகளை அழித்தாலும் பெரும்பாலான ஊர்களில் மக்கள் எதிர்க்கமாட்டார்கள். காரணம், ஒப்பந்தக்காரர்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என எல்லாக் கட்சிப் பொறுப் பாளர்களையும் "கவனித்திருப்பார்கள்". இதன் விளைவாக, ஊழலானது கோட்டையிலிருந்து குக்கிராமம் வரை சனநாயகப்படுத்தப் பட்டுள்ளது.

## திரைக் கதாநாயக வழிபாடு: தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றுச் சிதைவு




திராவிடக் கழகங்கள் ஊழலை நிறுவனமயமாக்கிய அதே வேளையில், சினிமாகாரர்கள் அரசியல் தலைவர்களாக மாற்றப்பட்ட வரலாற்றுச் சிதைவை ஊடகத்தின் மூலம் நிகழ்த்தின.

(அ). சினிமாவும் அரசியல் அதிகார மைய மாற்றமும்

தமிழர்களின் அரசியலில் சினிமா நுழைந்தது தற்செயலானது அல்ல. அது பல தசாப்தங்களாகத் திட்டமிட்டு நடந்த ஒரு கலாச்சார-அரசியல் பரிணாமம்.

- திரைக் கதாநாயகன் ஸ்ரீ மீட்பர் பிம்பம்: எம்.ஜி.ஆர். காலம் தொடங்கி, திரையில் ஏழைகளைக் காக்கும், நீதியை நிலைநாட்டும் கதாநாயக பிம்பம், நிஜ வாழ்விலும் மக்களின் "மீட்பராக" உருவகப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, மக்கள் தங்கள் நிஜமான அரசியல் தலைவரிடம் அல்ல, தங்கள் கதாநாயகர்களிடம் தீர்வைத் தேடத் தொடங்கினர்.

- அறிவுஜீவி அரசியல் முடக்கம்: சினிமா கவர்ச்சி அரசியலுக்குள் வந்த பிறகு, கொள்கை ரீதியான விவாதங்கள், பொருளாதாரத் திட்டமிடல், மற்றும் கல்விசார் அரசியல் உரையாடல்கள் பின்னடைவைச் சந்தித்தன. திரையின் கவர்ச்சியானது, நிஜ அரசியல் அறிவுஜீவிகள் மற்றும் சமூகப் போராளிகளுக்கான இடத்தைப் பறித்துவிட்டது.

(ஆ). தமிழ்க் கலாச்சாரத்தை சிதைத்த சினிமா மோகம்

- போலிக் கொண்டாட்டமும் வன்முறையும்: திரைக் கதாநாயகர்களின் ரசிகர் மன்றங்கள் நாளடைவில் வெறித்தனமான மோகத்தின் மையங்களாக மாறிவிட்டன. ஒரு நடிகருக்காக உயிரைக் கொடுப்பதும், மற்ற நடிகரின் ரசிகர்களுடன் மோதிக் கொள்வதும் "வீரம்" என்ற மாயையைக் கலாச்சாரமாக்கியது. கரூர் சம்பவம், இந்தச் சினிமா மோகத்தால் ஏற்பட்ட பேரழிவின் உச்சகட்ட வெளிப்பாடாகும்.

- நுகர்வுக் கலாச்சாரத்தின் ஆதிக்கம்: சினிமா, அதன் ஆடம்பரங்கள் மூலம் நுகர்வுக் கலாச்சாரத்தை ஆழமாக விதைத்தது. நிஜமான சமூகப் பணிகளை விட, "கட்-அவுட்" வைப்பது, பாலாபிஷேகம் செய்வது போன்ற வீண் ஆடம்பரங்களுக்கு இளைஞர்களின் ஆற்றலும் பணமும் செலவிடப்பட்டது. இது, மக்களை ஆடம்பரத்தை விரும்புபவர்களாகவும், கையூட்டு அரசியலைச் சாதாரணமாக எடுத்துக்கொள்பவர்களாகவும் மாற்றியது.

## உளவியல் உத்தி: மக்களின் அறியாமையை முதலீடாக்குதல்

ஜெயலலிதா, கருணாநிதி போன்ற தலைவர்கள், மக்களை ஆள்வதற்குத் தேவையான உளவியல் பேராசிரியர்கள் போல் செயல்பட்டனர். மக்களை மண்மேடு அளவிற்கு ஊழல்வாதிகளாக மாற்றினால்தான், தங்களின் மலையளவு ஊழலைச் சகித்துக் கொள்வார்கள் என்ற உளவியலைப் புரிந்துகொண்டவர்கள் இவர்கள்.

- மக்களுக்கான ஊழல் திட்டங்கள்: வாக்குச் சீட்டுக்காகப் பெண்களுக்கு மாதம் ரூ.1000 தரத் தயாராக இருக்கும் இதே ஆட்சியாளர்கள், தகுதியுள்ள பெண் பிள்ளைகளுக்கு முன்னோடியான புதிய வேலைவாய்ப்புத் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தத் தயாராக இல்லை.

- அடிமாட்டுக்கூலிக்குத் தமிழர்கள்: தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள 50 இலட்சம் நிரந்தரப் பணியிடங்களை நிரப்பாமல், அத்துக் கூலிக்கு ஒப்பந்த ஊழியர்களை அமர்த்துவதும், தமிழர்களுக்கு வேலை தராமல் இந்திக்காரர்களையும், அயல் மாநிலத்தவரையும் கொண்டு நிரப்புவதும், அவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகள் வழங்குவதும், "தமிழர் தாயகமாகத் தமிழ்நாடு நீடிக்கக் கூடாது" என்ற திராவிடச் சித்தாந்தத்தின் வக்கிரத் திட்டமாகவே இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகிறது.

- அரசு மதுபானக் கடைகள்: தமிழ்நாடு அரசே சாராயக் கடைகளை நடத்தி, மக்களைக் குடிகாரர்கள் ஆக்கியபின், "விடியல் நகரப் பேருந்துகளில்" பெண்களுக்குக் கட்டணமில்லாப் பயணச் சலுகை அளிப்பது எந்தவிதமான "விடியலை"க் கொண்டு வரும்?

கையூட்டு வாங்கி ஓட்டுப் போடும் பழக்கம் தமிழனுக்கும் தமிழச்சிக்கும் இருந்தால்தான், அதிகாரத்தைப் பயன்படுத்தி நீங்கள் அடிக்கும் கொள்ளைகளை இயல்பாக எடுத்துக் கொள்வார்கள் என்ற உளவியல் உத்தியே இங்கு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## மறுவார்ப்புக்கு அழைப்பு

இந்த கதாநாயக வழிபாட்டிலிருந்தும், நிறுவனமயமான ஊழலிலிருந்தும் தமிழ்ச் சமூகம் விடுபட வேண்டும். நாம் திரைக் கவர்ச்சியையும், இலவசங்களின் மயக்கத்தையும் தாண்டி, கல்வித் தகுதிக்கேற்ற வாழ்வூதியம் (ஜெர்மனி, பிரான்ஸ் போல்) கோருவதுடன், கொள்கைத் தெளிவும், நிர்வாகத் திறமையும் கொண்ட புதிய தலைமையை உருவாக்க வேண்டும்.

மக்களே! நம்மை ஆள்பவர்கள், ஊழல் கொள்ளையர்களாகக் கொற்றம் நடத்த அனுமதிக்காதீர்கள். அதற்கு முதல் தேவை, மக்களாகிய நாம் கட்சிக்காரர்கள் நம்மை ஊழல் பேர்வழிகள் ஆக்கிட அனுமதிக்கக் கூடாது! இளையோரே, நம் தமிழ் இனத்தை நாம்தான் மறுவார்ப்பு செய்ய வேண்டும். அதற்கு முதலில் நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

***எழுதியவர்: ஈழத்து நிலவன்,***
***தமிழ் தேசிய வரலாற்று ஆய்வாளர், உலக அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவ பகுப்பாய்வாளர்***

# இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 30 ராமேஸ்வரம் மீனவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு



- எஸ்.ஆர்.லெம்பேட் (09-10-2025)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 30 ராமேஸ்வரம் மீனவர்களை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் 9ம் திகதி அன்று வியாழக்கிழமை மாலை உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் ராமேஸ்வரம் பாம்பன் பகுதிகளை சேர்ந்த 30 மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்பரப்பில் 4 படகில் மீன்பிடியில் ஈடுபட்டு கொண்டிருந்த நிலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட 30 மீனவர்கள் கடற்படையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் 9ம் திகதி அன்று வியாழக்கிழமை காலை மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, திணைக்கள அதிகாரிகள் பதிவு நடவடிக்கைகளுக்கு பின்னர் 9ம் திகதி அன்று மாலை மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

மீனவர்கள் மீது எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றில் முற் படுத்தப்பட்டனர்.







குறித்த வழக்கை விசாரித்த மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 23ம் திகதி வரை மீனவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.



# தமிழ்நாடு அய்யாபுரம் தேவி ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவில் 32வது பூக்குழி திருவிழா

உலக செய்திகள்
World News


தென்காசி மாவட்டம், அய்யாபுரம், அருள்மிகு தேவி ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவிலில் 32வது ஆண்டு பூக்குழி திருவிழா கடந்த அக்டோபர் 06, 07 மற்றும் 08 ஆம் தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. திருவிழாவிற்கு முன்னதாக 10 நாட்கள் சிறப்பு அலங்காரத்துடன் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இத்திருவிழாவில் பெருந்திரளான ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

6வது தலைமுறையாக நடத்தி வரும் இத்திருவிழா ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் மூன்றாவது வாரத்தில் வரும் செவ்வாய்க்கிழமை அன்று தேவி ஸ்ரீ மாரியம்மனுக்கு மூன்று நாள் சிகர நிகழ்வாக நடைபெற்று வருகிறது.

முதல் சிகர நிகழ்வான அக்டோபர் 6ஆம் திகதி மாலையில் தீச்சட்டி மற்றும் தீச்சட்டி காவடி ஊர்வலம் நடந்தது, அதனை தொடர்ந்து தேவி ஸ்ரீ மாரியம்மனுக்கு சிறப்பு மாக்காப்பு அலங்காரத்துடன் சிறப்பு பூஜை நடைபெற்றது அதனை தொடர்ந்து தமிழ் பாரம்பரிய கரகாட்டம் அரங்கேறியது.

சிகர நிகழ்வான இரண்டாவது நாளான செவ்வாய்க்கிழமை காலை நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் முளைப்பாரியை இறை பக்தியுடன் தலையில் சுமந்து ஊர்வலமாக கோவிலுக்கு கொண்டு வந்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர். அதனை தொடர்ந்து பக்த நன்கொடையாளர்களின் உதவியுடன் மதிய அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது.

மாலை 04:30 மணியளவில் அருள்மிகு சக்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து குற்றால தீர்த்தம் தொடங்கபெற்று சுமார் 6 மணி நேரம் ஊர் முழுவதும் வலம் வந்து இரவு 10:30 மணியளவில் அன்னை தேவி ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவிலுக்கு வந்து அடைந்தது. அதனை தொடர்ந்து சிறப்பு பூஜை நடைபெற்று, நள்ளிரவு 21அடி நீளம் கொண்ட பூக்குழி அமைத்து அக்கினி வளர்க்கப்பட்டது.





மூன்றாவது நாளான அக்டோபர் 8, அதிகாலை 6 மணியளவில் நாதஸ்வர நையாண்டி மேளம் முழங்க, நூற்றுக்கணக்கான பக்தர்கள் புடைசூழ, மக்கள் வெள்ளத்தில் 32வது ஆண்டு பூக்குழி இறங்குதல் நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது. பூக்குழியினை காண வரும் பக்தர்களுக்கு வசதிக்காகவும் கூட்ட நெரிசலை சமாளிக்கும் விதமாக கோவில் நுழைவாயிலில் அகண்ட டுநுனு திரை நிறுவப்பெற்றது.

பின்னர் பக்தர்கள் தங்களின் நேர்த்திக்கடன்களை செலுத்துதல், முளைப்பாரி கரைத்தல் அதனை தொடர்ந்து மஞ்சள் பால் விளையாட்டு நடைபெற்று தொடர்ந்து அம்மனுக்கு மகா சிறப்பு பூஜையும், மகா தீபாராதனையும் நடைபெற்றது. சிறப்பு பூஜைக்கு முன்னதாக அன்னை ஸ்ரீ மாரியம்மனும், மகன் ஸ்ரீ பைரவரும் பக்த மெய் அன்பர்களுக்கு கணி வழங்கி அருள் புரிவர். விழாவைக் காண அய்யாபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

விழாவினை சிறப்பிக்கும் வகையில் கொக்கிரகுளம் மணிசங்கரம்மாள் வில்லிசை நிகழ்ச்சியும், குத்துக்கல்வலசை திருமலைக்குமார் நையாண்டி மேளமும் அரங்கேறியது.

இந்த மூன்று (06, 07 மற்றும் 08) நாள் திருவிழா ஏற்பாடுகளை காவல் துறையின் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு அய்யாபுரம் ஊர் நாட்டாண்மைகளும் பொதுமக்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். வரும் பக்தர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தீயணைப்பு துறை மற்றும் மருத்துவ முதல் உதவி குழு ஏற்பாடுகள் கூடுதல் சிறப்பு.

மேலும் சிறப்பாக 5 நாள் கொடையாக அன்னை தேவி ஸ்ரீ முப்புடாதி அம்மனுக்கு சித்திரை மாதத்திலும், மகன் ஸ்ரீ வைரவர்க்கு தை மாதத்திலும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

***செய்தி: கார்த்திகேயன்***
***புகைப்படம்: சரவணன், விக்ரமன்***

# ஆங்கில ஆசான்
## (நிலை மண்டில ஆசிரியப்பா)

------------------------------

*நாகேந் திரனென்ற நல்லதோர் ஆசான்*
*வாகாக வந்த தெமக்கு வரமே!*
*ஆங்கிலக் கல்வியை அழகாய்க் கற்கவே!*
*பாங்காய்ப் பாடப் பதிப்புத் தந்தே!*
*தாங்காக் குளிரிலும் தயங்கி நிற்காது*
*ஓங்கார மந்திர மாக ஓதுவார்*
*புத்தரைப் போலவே புனிதராய் வந்தே!*
*புத்து ணர்வுடன் புதன்கிழ மைகளில்*
*முத்தாய்ப் பாடம் நடாத்தும் முதல்வனை*
*சொத்தாய் எண்ணி தொழுது நிற்போம்*
*கனடாக் கதையும் கண்டத் தோற்றமும்*
*மனதில் வைத்தே மறந்திடாச் சொல்வார்*
*இலக்கண விதிகளை இதமாய்ச் சொல்லியே!*
*கலங்கிடா நாங்கள் கற்றிடச் செய்வார்*
*அன்னார் ஞாபக அறிவைக் கண்டு*
*என்னுள் எண்ணி ஏக்கம் கொள்வேன்*
*கதையுடன் கல்வியைக் கருத்துடன் இயம்பியே*
*சிதைவிலா தவற்றைச் சிந்தையில் ஏற்றுவார்*
*மூத்தோர் எமக்கு மூச்சாய் வழங்கும்*
*ஆத்மாவை ஆயுள் உளவரை மறவோம்*
*தன்னார்வத் தொண்டாய்த் தன்பணி செய்யும்*
*அன்னவர் ஆற்றலைப் போற்றி வாழ்த்துமே!*

*உலக ஆசிரியர் தினம் ஒக்டோபர் 01*

------------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
***(416) 844-7453***

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழர் தாயகத்தைச் சேர்ந்த பல குடும்ப உறுப்பினர்கள் தமது அன்புக்குரியவர்களுக்கான நீதி கிட்டாமலும் அறியாமலும் உயிரிழந்திருக்கிறார்கள்

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி கவலை தெரிவிப்பு!



ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான புதிய பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி, நீண்டகாலமாக நீதிக்காகப் போராடிவந்த நிலையில் அண்மையில் உயிரிழந்த டாக்டர் மனோகரன் அவர்களை நினைவுகூர்ந்ததுடன், இது பல குடும்ப உறுப்பினர்கள் தமது அன்புக்குரியவர்களுக்கான நீதி கிட்டாமலும், காணாமல்போன தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமலும் உயிரிழந்திருக்கிறார்கள் என்பதை நினைவுறுத்தும் வகையில் அமைந்திருப்பதாகத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இக்கூட்டத்தொடரின்போது நிறைவேற்றும் நோக்கில் பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணையனுசரணை நாடுகளால் “இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட 60/L1/Rev.1 எனும் புதிய பிரேரணை, திங்கட்கிழமை (06) பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

அதன்படி இணையனுசரணை நாடுகளின் சார்பில் இப்பிரேரணையை பேரவையில் சமர்ப்பித்து உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு:

பேரவையின் இக்கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலப்பகுதியில் உயிரிழந்த டொக்டர்.காசிப்பிள்ளை மனோகரனை இங்கு நினைவுகூருகிறேன். மனோகரன், 2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் தனது மகனான ரஜீகர் உள்ளடங்கலாக 5 மாணவர்கள் கொல்லப்பட்டதை அடுத்து நீதிக்காக அயராது போராடிவந்த செயற்பாட்டாளராவார்.

ஐக்கிய நாடுகள் சபையிலும், இப்பேரவையிலும் முன்னெடுத்த பிரசாரம் உள்ளடங்கலாக உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் நோக்கில் மனோகரன் முன்னெடுத்த தொடர் முயற்சிகள் பலருக்கும் முன்னுதாரணமாக அமைந்தன. மனோகரனின் உயிரிழப்பானது பல குடும்ப உறுப்பினர்கள் தமது அன்புக்குரியவர்களுக்கான நீதி கிட்டாமலும், காணாமல்போன தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமலும் உயிரிழந்திருக்கிறார்கள் என்பதை நினைவுறுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

இந்நிலையில் தற்போது எஞ்சியிருக்கும் தப்பிப்பிழைத்தோர், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் உண்மைக்கும், நீதிக்குமான கோரிக்கை உடனடியாக அணுகப்படவேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இப்புதிய பிரேரணையானது நீண்டகாலமாக நிலவும் மனித உரிமைகள்சார் கரிசனைகள் மற்றும் பல தசாப்தகால இனமோதலினால் ஏற்பட்ட காயங்களுக்குத் தீர்வுகாண்பதை முன்னிறுத்தி தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள் மற்றும் அதுசார்ந்த கடப்பாடு என்பன இப்பிரேரணையின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அத்தோட இக்கடப்பாடுகளை உரியவாறு நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

அதேபோன்று தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதப்புதைகுழி அகழ்வுகள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நீண்டகாலமாகக் காத்திருக்கும் பதில்களை வழங்குவதற்கான இயலுமையைக் கொண்டிருக்கின்றன. இதுகுறித்த விசாரணைகள் எதிர்கால அடையாளங்காணல் முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்யக்கூடியவகையிலும், பாதிக்கப்பட்ட நபர்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும் விதத்திலும் முன்னெடுக்கப்படவேண்டும்.

அதேவேளை சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதானது யுத்தகால மீறல்களுடன் தொடர்புடைய தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான முக்கிய நகர்வாக அமையும். அத்தோட மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் மீதான கண்காணிப்புக்கள் மற்றும் ஒடுக்குமுறைகளை முடிவுக்குக்கொண்டுவருவதானது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும், நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் இன்றியமையாததாகும் என்றார்.



# செம்மணியில் சேதப்படுத்தப்பட்ட அணையா விளக்கு தூபியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்!



செம்மணியில் அமைக்கப்பட்டிருந்த அணையா விளக்கு தூபி விசமிகளால் அடித்து நொறுக்கி சேதப்படுத்தப்பட்டிருந்தது.

செம்மணி மனிதப் புதைகுழி மீதான இருள் நீங்கவும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திற்கு சர்வதேச நீதி கோரியும் யாழ்ப்பாணத்தின் செம்மணி பகுதியில் “அணையா விளக்கு” போராட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. அதன்விளைவாக அணையாவிளக்கு தூபியும் அமைக்கப்பட்டது.

சேதப்படுத்தும் பட்ட இவ் அணையா விளக்கு தூபியை மீண்டும் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# மூளாய் காவேரி கலா மன்றத்தின் ஏற்பாட்டில் ஊடக வலுப்படுத்தல் பயிற்சி



யாழ்ப்பாணம் - மூளாய் காவேரி கலா மன்றத்தின் ஏற்பாட்டில் கிராமமட்ட சங்கங்களுக்கான ஊடக வலுப்படுத்தல் செயற்றிட்டமானது 8ம் திகதி புதன்கிழமை அன்றைய தினம் மூளாயில் உள்ள காவேரி கலா மன்றத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது மக்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது பயமில்லாத உரையாடல், நேர்த்தியான உரையாடல் போன்றவற்றை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

இதில் சமூக மட்ட அமைப்புகளில் அங்கம் வகிப்பவர்கள் கலந்துகொண்டனர்.



# பற்றைக்காடாக காட்சியளிக்கும் பண்டத்தரிப்பு வட்டார விளாவெளி இந்து மயானத்தை விரைந்து துப்பரவு செய்யுமாறு கோரிக்கை!

வலிகாமம் தென்மேற்கு - மானிப்பாய் பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட விளாவெளி இந்துமயானம் உரிய பராமரிப்பின்றி பற்றைக்காடுகள் நிறைந்து காணப்படுகிறதாக மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் அ.ஜோன் ஜிப்பிரிக்கோ கோரிக்கை விடுத்துள்ளார்.

விளாவெளி இந்து மயான உரிமை தொடர்பில் வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைகளுக்கிடையே நீண்ட இழுபறி இருந்த நிலையில் 2018 காலப்பகுதியில் இம்மயானத்தை மானிப்பாய் பிரதேச சபை பொறுப்பேற்க வேண்டுமென தீர்மானம் கொண்டுவந்து முதற்கட்டமாக மயானம் துப்பரவு செய்யப்பட்டது.

அதன் எரிகொட்டகை, இளைப்பாறு மண்டப புனரமைப்பு, மயான எல்லைப்படுத்தல் போன்ற அபிவிருத்தி பணிகள் செயல்படுத்தப்பட்டது.

விளாவெளி மயானத்தை மானிப்பாய் பிரதேச சபை ஆளுகைக்குள் எடுப்பதற்கும் அபிவிருத்தி பணிகள் நடப்பதற்கு காரணமாக இருந்தவன் என்கிற அடிப்படையில் தற்போது மயானம் உரிய பராமரிப்புகள் இன்றி பற்றைக்காடாக மாறியிருப்பது கண்டு மிகுந்த மனவேதனையடைகிறேன்.

தற்போதைய பண்டத்தரிப்பு வட்டார உறுப்பினரோ, மானிப்பாய் பிரதேசசபை தவிசாளரோ இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்காதது வேதனையானது.

தற்போது பிரதேச சபைக்கு சொந்தமாக துஉடி ரக கனரக இயந்திரம், சாரதி, மயான அபிவிருத்திக்களை கண்காணிக்கவென பிரதேச சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய தனிக்குழு இருந்தும் இம்மயானம் பற்றைக்காடாக காட்சியளிப்பது பிரதேச சபை நிர்வாகத்தின் பொறுப்பற்ற தன்மையாகவே இதை கருத வேண்டும்.



ஆகவே பொதுமக்களின் நன்மை கருதி விளாவெளி இந்து மயானத்தை முழுமையாக துப்பரவு செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

கனடிய செய்திகள் Canadian News

# ரொறன்ரோவில் "கிராமத்து வதனம்" பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற நவராத்திரி விழா



சென்ற ஞாயிற்றுக்கிழமை 5-10-2025 அன்று "கிராமத்து வதனம்" பெண்கள் அமைப்பினரால் நவராத்திரி விழா திஸ்ரில் நகர ஒன்றுகூடல் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராமத்துவதன நிர்வாகக் குழவினரால் வாசலில் விளக்கேற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேடையில் செந்தமிழ்பேரொளி பேராசிரியர் திரு. இ. பாலசுந்தரம், வதனம் முதன்மை ஆசிரியர் குரு அரவிந்தன், கவிஞர் அகணி சுரேஸ், செற்கோ திரு. வி.என். மதியழகன், விரிவுரையாளர் ஸ்ரீகுமரகுரு நாகேஸ்வரி, அம்மன் கோயில் முகாமையாளர் நவா கருணரட்ணராசா, திருமதி. பத்மா கரு, திருமதி. இராசம்மா இராசதுரை, பொறியியலாளர் திருமதி. கேதா கிருபராஜன், திரு. ஸ்ரீகுமரகுரு மகாதேவன், நிறுவுனர் கமலவதனா சுந்தா மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்தனர்.

மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடா தேசியப்பண், தமிழ்தாய் வாழ்த்து ஆகியன இசைக்கப்பெற்று அகவணக்கம் இடம் பெற்றது. தொடர்ந்து திருமதி. வேல்விழி அருள்மாறன் அவர்களின் வரவேற்புரை இடம் பெற்றது. அடுத்து சரஸ்வதி பூசை இடம் பெற்றபின் "திருவிளக்கே தேவிபராசக்தி" என்ற பாடலுக்கு பெண்கள் அமைப்பின் நடனக்குழுவின் நடனம் இடம் பெற்றது. அடுத்து நிறுவுனர் கமலவதனா சுந்தாவின் "ஓம் நமசிவாய" என்ற பாடலுக்குத் தனி நடனம் இடம் பெற்றது.



இதைத் தொடர்ந்து "வதனம் - 7" இளைய தலைமுறையினருக்கான இதழ் வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது. இளையதலைமுறை வதனம் இணையாசிரியர் கீஸ் நெல்சன் தயாளன் அவர்களின் அறிமுகவுரையைத் தொடர்ந்து வதனம் நிர்வாக ஆசிரியர் கமலவதனா சுந்தாவின் நூல் அறிமுகவுரை இடம் பெற்றது. தொடர்ந்து விரிவுரையாளர் திருமதி. ஸ்ரீகுமரகுரு நாகேஸ்வரி அவர்களின் ஆய்வுரை இடம் பெற்றது. அடுத்து வதனம் முதன்மை ஆசிரியர் எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் வெயீட்டுரை இடம் பெற்று மலர் வெளியிட்டு வைக்கப்பெற்றது.

எழுத்தாளர் குரு அரவிந்தன் "தேவாரப்புத்தகம் அச்சடித்துக் கொடுத்து, அதில் உள்ள தேவாரங்களை மனனம் செய்ய உதவிய கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பினரையும், அதன் நிறுவுனர் திருமதி. கமலவதனா சுந்தாவையும் பாராட்டி உரையாற்றினார். சுமார் 60 மாணவ, மாணவிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்தனர். இது போன்று கனடாவின் ஒவ்வொரு நகரத்திலும் உள்ள தமிழ் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுத்தால் எங்கள் தமிழ் மொழி இந்தமண்ணில் தொடர்ந்தும் நிலைத்து நிற்கும் என்பதையும், தமிழ் இளையோருக்காகக் கனடாவில் தொடர்ந்து வெளிவரும் ஒரேயொரு இதழ் வதனம் என்பதையும்" சுட்டிக் காட்டிச் சபையோருக்கு எடுத்துரைத்தார்.



திருமதி. பிரியா, திருமதி. அபிராமி, திரு. திருமதி. பாலேஸ்வரி பிரதீபன், திருமதி. ரதி செல்வம் ஆகியோர் சிறப்புப் பிதிகளைப் பெற்றுக் கொண்டனர். அடுத்து தேவாரம், திருக்குறள் மனனப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன. அடுத்து தருணி செல்வம், அட்சயா ரஜீபன், யுகாக்சனா சயந்தன் ஆகியோரது தீபநடனத்தைத் தொடர்ந்து பைரவி அருள்மாறன், லதீசா தயாளன், அபினயா சிவதாசன், நிவ்யா ஜெகன்நாதன் ஆகியோரது வயலின் இசை இடம் பெற்றது. அடுத்து "திருக்குறள் கூறும் அறிவுரைகள்" என்ற சிறுவர் நாடகம் இடம் பெற்றது.

சிறப்பு விருந்தினர் விரிவுரையாளர் ஐ. சண்முகநாதன், பேராசிரியர் இ.பாலசுந்தரம், நவா கருணரட்ணராஜா, சொற்கோ வி.என். மதியழகன் ஆகியோரது உரைகள் இடம் பெற்றன. அடுத்து செல்வி. சசிதா நாகராசாவின் நடனம் இடம் பெற்றது. இதைத் தொடர்ந்து மாணவி மதுரா சியாமளனின் நவராத்திரி விழா பற்றிய உரை இடம் பெற்றது. ஆசிரியர் விமலா புஸ்பநாதனின் நன்றியுரையுடன் நவராத்திரி விழா சிறப்பாக நிறைவு பெற்றது. அரங்கு நெறியாளராக இளைய தலைமுறையைச் சேர்ந்த தருண் செல்வம் இனிய தமிழில் பேசி விழாவைச் சிறப்பித்தார். வருகை தந்தோருக்கு நவராத்திரி விழா பொங்கல், வடை, மோதகம், கடலை போன்ற சிற்றுண்டி வழங்கப்பட்டது.


MANIPAY HINDU COLLEGE – MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS' ASSOCIATION-CANADA [ESTD 1991]
மானிப்பாய் இந்துக் கல்லூரி – மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் – கனடா

அன்பார்ந்த பழைய மாணவர்களே,

வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2025

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எமது பழையமாணவர் சங்கத் தலைவர் திரு. கமல்ராஜ் கதிர்காமநாதன் அவர்களின் தலைமையில், சிறப்புற நடைபெற இருக்கிறது. அனைத்து அங்கத்தவர்களும், தவறாது வருகைதந்து, நடப்பு வருட சந்தாப் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் புதிப்பிப்பதோடு, புதிய அங்கத்தவர்களையும் திரட்டி சங்க நடவடிக்கைகளில் இணைந்து சங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலம்: 12.10.2025 (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை
இடம்: Agincourt Community Recreation Centre, 31, Glen Watford Drive, Scarborough ON, M1S2B7

தலைவர்
கமல்ராஜ் கதிர்காமநாதன்
(416) 821-7870

செயலாளர்
பார்த்திபன் செல்வராஜா
(647) 710-9404

➢ முக்கிய குறிப்பு

பொதுச் சபைக்குக் கூட்டத்தில் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள், தங்கள் பிரேரணகளை எழுத்து மூலமாக ஐந்தாம் திகதிக்கு முன்னதாக mhcmlcosacanada@gmail.com என்கிற எங்கள் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்குமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம்.


# வரலாறு சொல்லும் "நன்றி தினம்" !

## – பாஞ்சாலன் –

-----------------------------

*தமிழருக்கு பொங்கல் புது வருடத்தின் தொடக்கம்
பழங்குடிக்கு நன்றிநாள் புது வாழ்வின் தொடக்கம்
இரண்டும் விரதத்தில் துவங்கி விருந்தில் நிறையும்
பொங்கலும் நன்றிநாளும் தொன்மத்துத் தொடர்பு*

*இலங்கையில் பொங்கல் சூரியன் சாட்சியாய்
கனடாவில் நன்றிநாள் பனியின் காட்சியாய்
தெய்வத்திற்கும் மனிதர்க்கும் நன்றி சொல்லும்
அறுவடைத் திருவிழா நம் வாழ்வின் வேராம்*

*அக்டோபர் அறுவடை கனடா செழித்திடும்
தங்கத் தானியம் களஞ்சியம் நிரப்பிடும்
வீடுகள் மகிழ்ச்சியில் புன்னகை நிறைத்திடும்
உலகம் தழுவிடும் உறவின் பொக்கிஷம்.*

*பண்டைய "பில்கிரிம்கள்" கதை பேசிட
பழங்குடி மனங்கள் கைகோர்த்திட
அறுவடை பண்டிகை ஆரம்பமாது
பின்னர் அதுவே நன்றி நாளாய் மாறிற்று.*

*அன்பும் நட்பும் ஒன்றாய் பிணைந்திட
அறுவடை உணவாய் மேசை விரிந்திட
விருந்தில் சுவையில் முக்கியம் பெற்றன
வான்கோழி இறைச்சியும் பூசனி நிரவலும்*

*நத்தாரில் ஒலித்துப் புகழ் பூக்கும்
"ஜிங்கிள் பெல்ஸ்" எனும் இனிய கீதம்
நன்றி நாளுக்காக பிறந்தது!
வரலாறு சொல்லும் வியப்பு இது!*

*பொங்கலோ நன்றியோ வாழ்வின் மகிழ்வே
குழந்தைகள் சிரிப்பில் வீடு பரவ
குடும்பம் ஒன்றாய் இதயம் மலர
உபசரித்த இயற்கைக்கு மானுட உபகாரம்*




# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1166



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோவில் மட்டக்களப்பு

மட்டக்களப்பில் வீரமுனை என்னும் அழகிய தமிழ்க்கிராமம் சம்மாந்துறையின் அருகே அமைந்துள்ளது. பண்டைக்காலத்தில் மட்டக்களப்பு, வீரமுனையைச் சார்ந்தே இருந்தது. இங்கிருந்து மேல்திசையில் சற்றுத் தொலைவில் அம்பாறை காணப்படுகின்றது. இங்கு ஓர் குளமுண்டு இதனை அம்பாறை வில் என்று அழைப்பர். அடர்த்தியான காடுகள் நிறைந்த இப்பிரதேசத்தில் இக்குளம் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் காட்டுயானைகள் அதிகமாக வாழ்வதால் அச்சந்தரும் பிரதேசமாக இப்பிரதேசம் விளங்குகின்றது. மலைக்குன்றுகளும், காடும், என்று ஆலயவரலாற்றிலே பதிவு செய்திருந்தேன். ஆந்நிலை இனறு அமைந்துவிட்டது. தூாம் தரிசித்த ஆலயங்களை மீண்டும் கண்டு வணங்கவும், வழிபடவும் மக்கள் ஆர்வங் காட்டி வருகின்றனர்.

மட்டக்களப்பிலுள்ள அம்பாறை வில்லுப்பிள்ளையார் ஆலயத்தின் வரலாறு சற்று வித்தியாசமாகக் காணப்படுகின்றது. ஆலயமுமூ குளமும் அமைந்த சூழ்நிலையில் ஆலயம் அமைந்திருந்தது. ஆனாலும் பிற்காலத்தில் மூர்த்தி இல்லாது ஆலயமும் குளமும் மட்டுமே எஞ்சிக் காணப்பட்டது. மூர்த்தி தலம், தீர்த்தம் என அமைந்திருந்த நிலையில், மூர்த்தி எவ்வாறு மறைந்தது என்ற எண்ணம், துரைச்சாமி என்ற அன்பர் மனதிலே எழுந்தது. அன்னியர் ஆதிக்கம் பெற்ற காலத்திலே, அவர்கள் இந்து ஆலயங்களை அழிப்பதில் தீவிர கவனம் செலுத்தியுள்ளனர். ஆயிரக்கணக்கா ஆலயங்கள் கொள்ளையிடப்பட்டு அழிக்கப்பட்டமை வரலாறு கண்ட உண்மை. இவ்வாறான சூழ்நிலையில் அடியவர்கள், திருவுருவங்களை நீர்நிலைகளில் போட்டுவைப்பதும், நிலத்தில் புதைத்துப் பாதுகாப்பதும் வழக்கமாகக் காணப்பட்டுள்ளது. ஆலயமும், குளமும் அருகருகே இருந்தமையால் அந்நியரின் அழிவிற்குப் பயந்து அடியவர் யாராவது ஆலயத்ததிருவுருவத்தைக் குளத்திலே போட்டு வைத்திருப்பார்களா? என்ற எண்ணம் அடியவர் துரைச்சாமி அவர்களிடம் மேலோங்கியது. இத்தகைய எண்ணங்களோடு காணப்பட்ட துரைச்சாமி அவர்களுக்கு ஆனைக்குட்டிச்சாமியாரின் தொடர்பு பக்கபலமாகக் காணப்பட்டது.

ஆனைக்குட்டி சுவாமிகள் பெயர்பெற்ற ஒரு சித்தர். இவருடைய சமாதி காரைதீவிலே காணப்படுகின்றது. சமாதியுள்ள இடத்திலே பல அற்புதங்கள் நிகழ்வதாக அனுபவித்த அன்பர்கள் கூறுவர். அருளும் அற்புதமும் கொண்ட ஆலயங்கள் பலவற்றிலும் சித்தர்களின் சமாதி இருப்பது குறிப்பிடத்தக்கது. கடந்தகால, நிகழ்கால, எதிர்கால நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டும் வல்லமை படைத்தவர்களாகவும், அற்புதங்களைச் செய்ய வல்லவர்களாகவும் சித்தர்கள் விளங்குவர். ஆனைக்குட்டிச் சாமியார் இவ்வாறான சிறப்புக்களைக் கொண்டவர். அடியவர் துரைச்சாமியாரின் திருவுருவத் தேடுதலுக்குப் பக்கபலமாக ஆனைக்குட்டிச்சாமியார் விளங்கியுள்ளார். ஆனைக்குட்டிச்சாமியாரின் திருவாக்கின்படி ஆலயத்திற்கு அருகிலுள்ள குளத்தில், ஆனைமுகனின் விக்கிரகம் உள்ளது என்று துரைச்சாமியார் அறிந்து கொண்டார்.

> *" விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
> *விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே*
> *விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்*
> *கண்ணிற் பணிமின் கனிந்து. "*

விநாயகரை மனதிருத்தி ஆலயத்திற்கு அருகிலுள்ள குளத்தில் இறங்கித் தேடும் முயற்சியை துரைசாமி மேற்கொண்டார். காட்டு யானைகள் சாரி சாரியாகக் குளிப்பதையும், முதலைகளின் வதிவிடமாகவும் விளங்கும் குளத்தில் துரைச்சாமியார் இறங்கித் தேடுதலில் ஈடுபட்டார். நாட்கணக்காக குளத்தில் தேடி, இறுதியில் விநாயக விக்கிரகத்தைக் கண்டுபிடித்தார். குளத்திலிருந்து பெரும்பாடுபட்டுக் கரைக்குக் கொண்டுவந்து தனக்குத் தெரிந்த விதத்திலே பீடம் அமைத்து, பந்தலிட்டுச் சிறுகோவிலாக்கி வழிபாடியற்றி வந்தார்.

திருவுருவம் கிடைத்த செய்தி அண்டைக்கிராமங்களுக்கும் பரவியது. அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோயில் என அழைக்கப்பட்ட அந்தக் கோயிலை நாடி வேளாண்மைத் தொழில்புரியும் வீரமுனை, மல்வத்தை, சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, நீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த கமக்காரர் பயபக்தியோடு பொங்கலிட்டு வழிபாடு செய்யும் வழக்கம் ஏற்பட்டது. கணபதியை நிலவளம், விளைச்சல் பெருக்கம், வாழ்க்கை நலம், அறிவுப்பேறு ஆகியவற்றை நாட்டுக்கும், மக்களுக்கும் அளிக்கும் தெய்வமாக இந்துக்கள் கருதுவர்.

பிற்காலத்திலே ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் அதிகாரிகளும், ஊழியர்களும் இக்கோயில் வழிபாட்டிலே கலந்து கொண்டபின்னர் பல மாற்றங்கள் ஏற்பட்டது. குளத்திலே மறைந்திருந்து வெளிவந்த பிள்ளையாரின் மகிமை எங்கும் பரவலாயிற்று. சாதி மத பேதமின்றிப் பலரும் நேர்த்திகள் வைத்து வழிபாடு செய்து வணங்கும் கோயிலாக அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோவில் விளங்கியது.

இந்நிலையில் ஒரு முஸ்லீம் அன்பருடைய மாடு காணாமற் போய்விட்டது. தனது மாட்டைக் கண்டுபிடித்துத் தருமாறும், கிடைத்தால் பெருங் காணிக்கை செலுத்துவதாகவும் அந்த அன்பர் வேண்டிக் கொண்டார். எனினும் மாடு கிடைக்கவில்லை. பலரும் வேண்டுதல் செய்யும்போது கொடுக்கும் பிள்ளையார், தான் காணிக்கை செலுத்துவதாகக் கூறியும் ஏன் தனது கோரிக்கையை ஏற்கவில்லை என்று ஆத்திரங்கொண்டு, கோடரியால் விநாயகர் திருவுருவத்தைத் தாக்கி, ஒரு திருக்கரத்தைத் துண்டித்தார். அவ்வேளையில் தொலைந்துபோன அவரது மாடு எங்கிருந்தோ வந்துசேர்ந்ததாயினும், கைகால் வழங்காது தனது தவறை மன்னிக்குமாறு வேண்டி இறந்துபோனதாகக் கூறுவர். அன்பை ஆதாரமாகக் கொண்ட சரணாகதியின் மூலம் பலரும் நன்மைபெற்றபோதிலும், காணிக்கை மூலம் தனது காரியத்தை சாதிக்க நினைத்ததாலோ என்னவோ உடனடியாக அவருடைய எண்ணம் நிறைவேறவில்லை.

**வளரும்...**



கனடிய செய்திகள்
Canadian News

# புற்றுநோய்க்கான உயிர்காக்கும் மருந்துகளை இலகுவில் பெறும் வழியை ஒன்ராறியோ அரசாங்கம் துரிதப்படுத்துகிறது என்கிறார் விஜய் தணிகாசலம்

ஒன்ராறியோவின் 'FAST' (Funding Advanced Systemic Therapies) எனப்படும் புதிய முன்னோடித் திட்டம் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்கான மருந்துகளுக்குக் காத்திருக்கும் கால அளவை ஒரு வருடத்தால் குறைத்து, மருத்துவப் பயனாளிகள் முன்கூட்டியே ஒவ்வோர் ஆண்டும் 7-10 உயர் சிகிச்சைகளை எளிதாகப் பெற முடியும். இம்முயற்சி, ஏறத்தாழ 9 மில்லியன் ஒன்ராறியோ வாழ் மக்களுக்கு 9.5 பில்லியன் டொலர் முதலீட்டை அடிப்படையாகக் கொண்ட ஒன்ராறியோ மருத்துவ நலன் திட்டத்தின் கீழ் 5,900 மருந்துகளுக்கான காப்பீட்டை வழங்கும். இது பற்றிக் கருத்துத் தெரிவித்த இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள், "ஒவ்வொரு மருத்துவப் பயனாளியும் தனக்கு வேண்டிய பராமரிப்பு மற்றும் சிகிச்சைகளை உரிய நேரத்தில் பெற உரித்துடையவர். இத்திட்டம் உயிர்களைக் காக்கவும், ஸ்காபரோ போன்ற சமூகங்களில் உள்ள குடும்பங்களுக்கு நம்பிக்கை கொடுக்கவும் உதவும்" என்றார்.

புற்றுநோய்க்கான மருந்துகளுக்கும் அவை சார்ந்த ஏனைய சிகிச்சைகளுக்காகவும் ஒன்ராறியோ ஆண்டுதோறும் 2.75 பில்லியன் டொலர்களை முதலீடு செய்வதால், இந்நடவடிக்கை ஸ்காபரோ வதிவாளர்கள் தங்கள் வீட்டிற்கு அருகிலேயே முக்கிய சிகிச்சைகளை விரைந்து, நியாயமாகப் பெற இது உறுதி செய்கிறது. 'FAST' முன்னோடித் திட்டமானது அனைத்து சமூகங்களுக்கும் நோயாளிகள் பராமரிப்பை மேம்படுத்துவதற்கும் சுகாதார சேவையை வலுவாக்கவும் ஒன்ராறியோ அரசு கொண்டுள்ள உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.




# கனடா – ஸ்காபுறோவில் சிறப்புற நடைபெற்ற நடைபெற்ற அரியானா தனேந்திரன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்



கனடாவில் நீண்ட காலமாக வெற்றிகரமாக இயங்கிவருகின்ற நாட்டிய கலாசேஸ்த்திர நடனக் கல்லூரியின் அதிபர் ஸ்ரீமதி. தேனுஜா திருமாறன் அவர்களின் மாணவியும் தனா தனேந்திரன் தம்பதியின் புதல்வியுமான நடனச் செல்வி அரியானா தனேந்திரன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஸ்காபுறோவில் அமைந்துள்ள சீனக் கலாச்சார மண்டபத்தில் 3ம் திகதி வெள்ளிக்கிழமையன்று சிறப்புற நடைபெற்ற நடைபெற்றது.

அரங்கேற்ற விழாவை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ரமணன் சந்திரசேகரமூர்த்தி அவர்களும் செல்வி மொனிசா மோகன் அவர்களும் சிறப்பாக தொகுத்துவழங்கினார்கள்.

ஆரம்பத்தில் புஸ்பாஞ்சலி - அலாரிப்பு ஆகிய உருப்படிகளோடு மேடையில் தோன்றிய பரதநாட்டியச் செல்வி. அரியானா தனேந்திரன் தனது குரு மற்றும் பக்கவாத்தியக் கலைஞர்களாக மேடையில் அமர்ந்திருந்த இசை வித்தகர்களுக்கு மரியாதையும் வணக்கமும் சமர்ப்பணம் செய்து தனது அன்றை அரங்கேற்றத்தை விருப்புடன் ஆரம்பித்தார். சபையில் அமர்ந்திருந்த ரசித்த அனைவரும் தங்கள் ரசனையை கரகோசங்கள் மூலம் வெளிக்காட்டினார்கள்.



மேற்படி அரங்கேற்றத்தில் அரியானா அவர்களின் குரு தேனுஜா திருமாறன் அவர்கள் நட்டுவாங்கம் மற்றும் நடனங்கள் மீதான மேற்பார்வை ஆகியவற்றையும் கவனித்து தன்



பணியைச் சிறப்பாக ஆற்றினார்.

பாடல்களை இனிமையாகப்பாடினார் அருண் கோபிநாத் அவரது பாடல்களில் நிறைந்திருந்து கம்பீரமும் இனிமையும் அரியானாவிற்கு மேலும் உற்சாகத்தைத் தந்திருக்க வேண்டும் என்றே கூறலாம். மிருநதங்க இசையை நன்கு அறியப் பெற்றவரான ரதிரூபன் பரஞ்சோதி அவர்கள் வழங்கி தனது தாளலய இசையினால் நடனங்களின் செழுமையைப் பாதுகாப்பவரா அந்த மேடையில் விளங்கினார்.

புல்லாங்குழல் இசை வழங்கிய டாக்டர் செல்வநாயகம் தயாபரம் அவர்கள் வழமைபோல எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி குழலோசையை நேர்த்தியாக வெளிக்கொணர்ந்து தேவையான தருணங்களில் அதனை ஒலிக்கச் செய்து அரியாணாவின் நடனங்களுக்கும் பாடகர் கோவிநாத் அவர்களின் பாடல்களுக்கும் மெருகூட்டினார்.

வீணை இசை வழங்கிய பிரபா தயாளன் அவர்களும் தனது வழமையானதும் நேர்த்தியானதும் விரலோசையை அந்த அற்குபுதக் இசைக்கருவி முலம் வழங்கி அரியானாவின் அரங்கேற்றத்தை மேன்மையுறச் செய்தார். வயலின் இசை வழங்கிய மயூரன் கிரிதரன் அவர்கள் வயதில் குறைந்தவராக இருந்தாலும் வாத்தியத்தில் வித்தகனாக விளங்கி அரியானவின் அரங்கேற்றம் மேலும் சிறப்புற வழிசமைத்தார் அத்துடன் பாடகர் அருண் கோபிநாத் அவர்களின் வாழ்த்துக்களையும் பெற்றுக்கொண்டார்.


தொடர்ந்து அரங்கேறிய அனைத்து உருப்படிகளையும் அரியானா அவர்கள் தனது குருவின் வழிகாட்டலில் அற்புதமாக சமர்ப்பித்தார். வர்ணம் என்ற நீண்ட உருப்படியை அழகாகவும் அவதானத்துடனும் அவர்கள் சமர்ப்பித்ததை சபையோரும் ஏனைய நடன ஆசிரியையும் பாராட்டி கரகோசம் வழங்கினார்கள்.

பிரதம விருந்தினர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஆகியோரது உரைகளும் அங்கு இடம்பெற்றன.












மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1167

## அம்பாறை வில்லுப்பிள்ளையாஉ கோவில் மட்டக்களப்பு

இந்நிலையில் ஒருநாள் இளைப்பாறிய நீதிபதியாக விளங்கிய ஸ்பென்சர் இராஜரத்தினம் அவர்களும், கதிர்காமம் மாணிக்கப்பிள்ளையார், தெய்வயானை அம்மன்கோயில் என்பவற்றிற்குப் பொறுப்பாளராக விளங்கிய சுவாமி இராம ஸ்ரீ பாவா அவாகளும், கதிர்காமம் இராமகிருஷ்ணமடத்தின் முகாமையாளராக விளங்கிய சுவாமி சர்வாதீதானந்தா அவர்களும் கதிர்காமத்திலிருந்து திக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு, துரைசாமித்தொண்டரையும் அழைத்துக்கொண்டு அம்பாறை வில்லுப்பிள்ளையாரின் சிறுகோவிலை அடைந்தனர். துரைசாமித்தொண்டர், மற்றும் ஆனைக்குட்டிச்சாமியார் மூலம் விபரங்களை அறிந்து கொண்டனர். அழிக்கப்பட்ட பிள்ளையார் கோவிலின் மூல வரலாற்றை அறிய முயன்றபோதிலும் முடியாது வருந்தினர்.

அழிக்கப்பட்ட கோவில் இருந்த இடம் மூர்த்தி. தலம், தீர்த்தம் என்ற சிறப்புப்பெற்ற இடமாக விளங்கியதோடு, விளைச்சல மிகுந்த பூமியை அண்டி இருந்த காரணத்தால், ஆனைமுகன் ஆலயமே இருந்திருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். இவ்வாறான சிறப்புக்கள் அமைந்திருந்து அழிந்த ஆலயத்தை மீளக் கட்டியெழுப்புவது இந்துக்களின் கடமை எனத் தெரிவித்து, ஆலயத்தைத்தைக் கட்டி முடித்ததும் எமக்கு அறியத்தந்தால் கதிர்காமத்தில் தெய்வயானைகோவிலில் நித்திய வழிபாட்டில் வைத்திருக்கும் விநாயகப்பெருமானை, அம்பாறை வில்லுப்பிள்ளையார்கோவிலில் எழுந்தருளச் செய்ய முடியும் என்று, இராம ஸ்ரீ பாவா சொல்லிச் சென்றார். இதற்கமைய ஆலய வேலைகள் முடிவுபெற்று, கதிர்காமத்திலுள்ள பிள்ளையார் விக்கிரகத்தை அம்பாறைக்குக் கொண்டுவந்தனர். இவ்வாறு கொண்டுவரப்பட்ட பிள்ளையார்விக்கிரகத்தை கருவறையின் மகாபீடத்தில் எழுந்தருளச் செய்ய முயன்றபோது, மகாபீடம் சற்றுச் சிறியதாகக் காணப்பட்டது. செய்வதறியாது திகைத்த பரிபாலனசபையினர் மாற்று முடிவொன்றை எடுத்தனர்.

அம்பாறையிலிருந்து ஏழுமைலுக்கப்பால் இறக்காமம் பிள்ளையார் கோவில் உள்ளது. இக்கோவிலுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப்பட்டிருந்த பிள்ளையார் விக்கிரகத்தை பெற்று வந்து அம்பாறை வில்லுப்பிள்ளையார் மகாபீடத்தில் வைத்துப் பார்த்தனர். மிகப்பொருத்தமாகப் பீடம் அமைந்திருந்தது. இறக்காமம், மற்றும் அம்பாறை பிள்ளையார் கோவில் பரிபாலனசபையினரின் முடிவுப்படி கதிர்காமத்திலிருந்து தருவிக்கப்பட்ட பிள்ளையாரை, இறக்காமம் பிள்ளையார் கோவிலிலும், இறக்காமம் பிள்ளையார் கோவிலுக்காகச் செய்யப்பட்ட பிள்ளையார் விக்கிரகத்தை, அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோவிலிலும் எழுந்தருளச் செய்வதென முடிவெடுக்கப்பட்டது.

அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோவில் கோபுரவேலைப்பாடுகள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கவேல் ஆச்சாரியாரால் செய்யப்பட்டது. இவ்வேலைகள் முற்றுப்பெற்றதும் கல்லோயா இந்து பரிபாலன சபையாரின் திட்டப்படி, யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் அவர்களால் 1965 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தப்பட்டது. கும்பாபிஷேகத்தின் பின்னர் அம்பாறை வில்லுப்பிள்ளையார்கோவில், அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவில் என அழைக்கப்பட்டது.

துரைசாமித் தொண்டரின் தனிப்பட்ட முயற்சியாகக் காணப்பட்ட ஆலய வேலைகள் அன்னாரின் விருப்பப்படி, கல்லோயா அபிவிருத்திச் சபையில் பணிபுரிந்து வந்த அன்பர்கள் சிலர் சோந்து அமைத்த, கல்லோயா இந்துபரிபாலன சபையின் பொறுப்பிலும் கொடுக்கப்பட்டது. இச்பையினர் ஆலய வளர்ச்சிக்காக அக்காலப்பகுதியில் அரும்பணியாற்றியுள்ளனர். ஆலயபரிபாலன சபையின் தலைமைப் பொறுப்பை திரு. இ. புஷ்பரத்தினம் அவர்கள் ஏற்று பல பணிகளைச் செய்துள்ளார். சபையின் நன்மையையும், ஆலய வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு நம்பிக்கையாளர் சபையொன்றும் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் காணி உத்தியோகத்தராகவிருந்த கல்லடி உப்போடையைச் சேர்ந்த எஸ்.கணபதிப்பிள்ளை, மல்வத்தையைச் சேர்ந்த எஸ். சேல்லத்துரை விதானையார், மண்டூரைச் சோந்த ஏ.சிதம்பரப்பிள்ளை தோம்புதோர், காரைதீவைச் சேர்ந்த என்.நவரத்தினம் ஆகியோரும் மேற்கூறப்பட்ட சபையிலே அங்கம் வகித்தனர்.

இந்து பரிபாலனசபை ஆலயவளாச்சியைக் கருத்தில்கொண்டு ஏதாவது தீர்மானம் எடுத்தால், அத்தீர்மானம் அடுத்து நிகழும் தானிகர் சபையின் ஆலோசனைக்கும், அங்கீகாரத்திற்கும் விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னரே, கருமங்களைத் தொடங்கும் வழக்கம் காணப்பட்டது. இந்டைமுறை கடுமையாகப் பின்பற்றப்பட்டது. அத்தோடு வருடமொருமுறை ஆட்சிக்குழுத் தெரிவு நடைபெற வேண்டும் என்ற நியதி, உபவிதிகளின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகவும் விளங்கியது. ஆட்சிக் குழுக்கள் மாறி மாறி அமைந்தாலும் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டு பல தெய்வ கைங்கரியங்களை நிறைவேற்றியுள்ளனர்.

வடதிசை நோக்கி எழுந்தருளியுள்ள ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையாரின் பிரதான மண்டபத்தின் வலப்பக்கத்தில், ஒரு நீண்ட மண்டபம் நடராஜர் வாயிலைத் தொட்டு அமைக்கப்பட்டுள்ளது. இடது பக்கமாக நவக்கிரகக் கோவிலை உள்ளடக்கி ஒரு மண்டபமும் காணப்பட்டது. குளத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டு அன்பரினால் சேதமாக்கப்பட்ட பிள்ளையார் திருவுருவம் பழைய பிள்ளையார் என்று அழைக்கப்பெற்று, ஆலயத்தின் ஒரு கோடியில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்திலே மூன்று காலப்பூசை சிறப்பாக நடைபெற்றது. அத்தோடு விநாயகர் சதுர்த்தி, சஷ்டிவிரதங்கள், நவராத்திரி, சிவராத்திரி, முதலிய விசேட பூசைகளும், ஆவணி மாதத்திலே வருடாந்த விழாவும், தீர்த்த உற்சவமும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

பொதுவாக எல்லா ஆலயங்களும் தலபுராணங்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இவை யாவும் அனுபவித்து, அருளைப்பெற்று அனுபவரீதியாக எழுதப்பட்ட பாடல்களாகக் காணப்படுவது பெருஞ் சிறப்பாகும். அத்தோடு பதிகம், மான்மியம், ஊஞ்சல்பாடல்கள் என்பவற்றையும் திருக்கோயில்கள் பலவும் கொண்டவையாக விளங்குகின்றன. இவற்றை எழுதியோர் அந்தந்த ஆலயங்களோடு உறவாடி, அந்தந்த ஆலயங்களின் சிறப்புக்களை நேரடியாகவே அனுபவித்து எழுதியுள்ளார்கள். இப்பாடல்களிலே ஆலயத்தின் அழகு, சுற்றாடலின் இயற்கைத் தன்மை, ஆலயத்தில் எழுந்தருளியுள்ள் இறைவனின் அற்புதத்தோற்றம், அருள் பெற்றோரின் அனுபவங்கள் என பல்வேறு சிறப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறு எழுதப்படும் பக்திரசமிக்க பாடல்கள் அனுபவத்தின் வெளிப்பாடாக, அனுபவித்து உணாந்த பாடல்களாக, ஒவ்வொரு தலத்தின்மீதும் தேர்ந்த புலவர்களால் பாடப்பட்டுள்ளது. இத்தகைய அனுபவரீதியான பாடல்கள் அன்றும் இன்றும் என்றும் போற்றப்படத்தக்கவையாகக் காணப்படுகின்றன.

வளரும்...

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணி ஒருவரை நீதிமன்ற ஆணை இல்லாது பொலிஸார விசாரணை செய்ததிற்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னாரிலும் சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பு



(07-10-2025)

யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணி ஒருவரின் வீட்டில் உரிய வகையில் தேடுதல் ஆணை இல்லாது பொலிஸாரால் சோதனை முன்னெடுக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வடமாகாண சட்டத்தரணிகள் 7ம் திகதி செவ்வாய்க்கிழமைன்று ஒருநாள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர்.

குறித்த பணிப் புறக்கணிப்புக்கு வலு சேர்க்கும் வகையில் மன்னார் சட்டத்தரணிகளும் 7ம் திகதி அன்றைய தினம் பணிப் பகிஸ்கரிப்பை மேற்கொண்டனர்.

மாவட்ட நீதிமன்றம் மற்றும் மன்னார் நீதிமன்றத்திற்கு அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை சட்டத்தரணிகள் சமூகமளிக்காது பணிப் பகிஸ்கரிப்பை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட சம்பவம் எதிர் காலத்தில் இடம் பெறக் கூடாது என்பதை வலியுறுத்தி குறித்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை சட்டத்தரணிகள் முன்னெடுத்தனர்.

இதனால் அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மன்னாரில் நீதிமன்ற செயல்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதோடு, அன்றைய நாளுக்கான வழக்கு விசாரணைகள் பிரிதொரு தினத்திற்கு தவணை இடப்பட்டது.



## மன்னாரில் உரிய அனுமதியின்றி இயங்கி வந்த தனியார் தங்கும் விடுதிக்கு நகர சபை வழங்கியுள்ள சிவப்பு அறிவித்தல்

(09-10-2025)

மன்னார் சின்னக்கடை பகுதியில் எவ்வித அனுமதியும் இன்றி இயங்கி வந்த தனியார் விடுதி ஒன்றுக்கு 9ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் நகர சபையினால் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன் தலைமையிலான குழுவினர் குறித்த விடுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.

இதன் போது எவ்வித அனுமதியும் இன்றி குறித்த விடுதி அமைக்கப்பட்டு இயங்கி வந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த அனுமதியற்ற கட்டிடம் தொடர்பில் உரிய ஆவணங்களை எதிர்வரும் 14 தினங்களுக்குள் மன்னார் நகர சபையில் சமர்ப்பிக்க கோரிக்கை விடப்பட்டுள்ளது.

குறித்த தினத்திற்குள் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க படாத நிலையில் குறித்த கட்டிடம் அனுமதியற்ற கட்டிடம் என கருதி நகர சபை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக வும், நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்திற்கு அமைவாகவும், சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த கட்டிடம் இடித்து அகற்றப் படும் என என மன்னார் நகர சபை அறிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக சிவப்பு அறிவித்தல் குறித்த விடுதியின் நுழை வாயிலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் நகர சபை பிரிவில் பல்வேறு தனியார் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ள போதும் குறித்த தனியார் விடுதிகள் பல எவ்வித கண்காணிப்புகளும் இன்றி காணப்படுவதனால் பல்வேறு சமூக சீரழிவுகள் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



எனவே மன்னார் நகர சபை பிரிவில் உள்ள தனியார் விடுதிகள் தொடர்பில் மன்னார் நகர சபை துரித கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA
FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins
MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

தமிழ் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம்
RIDE-U
• Airport
• Niagara Falls
• Ottawa
• Montreal
• Quebec City
• USA
rideu2025@gmail.com
(416)789-6556
BOOK NOW

உதயம் 1540 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 10, 2025

# நாளை மறுநாள் 10.12.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நெஞ்சம் மறப்பதில்லை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள TMS செல்வகுமார் கனடா வந்துள்ளார்.



நாளை மறுநாள் ஸ்காபரோவில் நடைபெறவுள்ள “நெஞ்சம் மறப்பதில்லை” இசை நிகழ்ச்சியில் சிறப்பு பாடகராக கலந்துகொள்ளவுள்ள அமரர் **TM** சௌந்தரராஜன் அவர்களின் புதல்வர் **TMS** செல்வகுமார் நேற்று வியாழக்கிழமை பீர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கினார். அவரை வரவேற்க சென்ற குழுவில் பாடகர் கலைமாமனி இராமு (தமிழ்நாடு), பாடகி வர்ஷா (தமிழ்நாடு), மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் குரு யோகராஜா, **GTA** ஊடகர் கெங்கா, ஹரேன் கிருஷ்ணசாமி ஆகியோர் செல்வகுமார் அவர்களை வரவேற்பதே காணலாம். மேலதிக விபரங்களுக்கு உள்ளே 11ம் பக்கம் உள்ள விளம்பரத்தை பார்க்கவும்.



# கனடா – மொன்றியால் மாநகரில் நாளை 11ம் திகதி சனிக்கிழமையன்று நடைபெறவுள்ள "மதுரகான இசை மன்றத்தின்" மாணவி மிதுலா கனகசபை அவர்களின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம்.!

மொன்றியாலில் நீண்ட காலமாக இயங்கிவரும் “மதுரகான மன்றம்” இசைப் பயிற்சி நிறுவனத்தின் நிறுவனர் ஆசிரியை சிவமலர் மதுரநாயகம் அவர்களின் புதல்வியும் இசை ஆசிரியையுமான நயனி மதுரநாயகம் அவர்களின் மாணவியும் திரு-திருமதி கலைச்செல்வன்-ஜெதீபா ஆகியோரின் அன்புப் புதல்வியுமாகிய இசைச் செல்வி மிதுலா கனகசபை அவர்களின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம்.. கனடா- மொன்றியால் மாநகரில் நாளை 11-10-2025 சனிக்கிழமையன்று 4901 **Rue College Beaubois Pierrefonds** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **Theatre Beaubois** மண்டபத்தில் சிறப்புற நடைபெறவுள்ளது. இந்த அரங்கேற்றம் தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற கலைச்செல்வன் கனகசபை அ வர்களை 514 889 5951 என்ற இலக்கத்தில் அல்லது ஜெதிபா விஜயரடனம் அவர்களை 515 823 5951 என்னும் இலக்கத்தில் அழைக்கலாம்.

# சமூக மற்றும் அரசியல் செயற்பாட்டாளரும் வர்த்தகருமான ஸ்ரீஸ்கந்தராஜன் வல்லிபுரநாதர் அவர்களின் புதல்வர்கள் இருவர் கனடாவில் சட்டத்தரணிகளாக விளங்குகின்றார்கள்





கனடாவில் மிக நீண்ட காலமாக சமூக, வர்த்தக மற்றும் அரசியல் செயற்பாட்டாளராகவும் ஊடக நண்பர்களை மதிக்கும் பண்பு கொண்டவராகவும் விளங்கும் ஸ்ரீஸ்கந்தராஜன் வல்லிபுரநாதர் (ஸ்ரீ) அவர்களின் புதல்வர்கள் தர்ஷன் மற்றும் பிரதீப் ஆகிய இருவரும் கனடாவில் சட்டத்தரணிகளாக பணியாற்றுகின்றார்கள் என்பது அவர்களின் நண்பர்கள் மத்தியில் மகிழ்ச்சிக்குரிய விடயமாக கருதப்பட்டு வருகின்றது.

மிக அண்மையில் சட்டத்துறையில் பட்டம் பெற்றும பின்னர் உயர் நீதி மன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுத்த பினனர் அவர்கள் இருவரும் தங்கள் சட்டத்துறைப் பணிகளைத் தொடர்ந்து வருகின்றார்கள். இங்கே காணப்படும் படங்களில் மேற்படி தர்ஷன் மற்றும் பிரதீப் ஆகிய இருவரும் தாங்கள் சட்டத்தரணிகளாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்ட நாளில் தமது பெற்றோருடன் மகிழ்ச்சியுடன் நிற்பதைக் காணலாம்!



# ஸ்காபுறோவில் சிறப்புற நடைபெற்ற நடைபெற்ற அரியானா தனேந்திரன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்

கனடாவில் இயங்கிவருகின்ற நாட்டிய கலாசேஸ்த்திர நடனக் கல்லூரியின் அதிபர் ஸ்ரீமதி தேனுஜா திருமாறன் அவர்களின் மாணவியும் தனா தனேந்திரன் தம்பதியின் புதல்வியுமான நடனச் செல்வி அரியானா தனேந்திரன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஸ்காபுறோவில் அமைந்துள்ள சீனக் கலாச்சார மண்படத்தில் 3ம் திகதி வெள்ளிக்கிழமையன்று சிறப்புற நடைபெற்ற நடைபெற்றது. அரங்கேற்ற விழாவை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ரமணன் சந்திரசேகரமூர்த்தி அவர்களும் செல்வி மொனிசா மோகன் அவர்களும் சிறப்பாக தொகுத்துவழங்கினார்கள்.
(தொடர்ச்சி 21ம் பக்கம்)



# விடுதலைப் புலிகள் இறுதி யுத்தத்தில் மக்கள் இறப்பதை விரும்பவில்லை இதற்கு நானே சாட்சி என்கிறார் கஜேந்திரகுமார் எம்பி!



விடுதலைப் புலிகள் இறுதி யுத்தத்தில் மக்கள் இறப்பதை விரும்பவில்லை˙ இதற்கு நானே சாட்சி என கஜேந்திரகுமார் எம்பி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதி யுத்தத்தில் கூட தமிழ் மக்கள் கொல்லப்படுவதை விரும்பவில்லை என்பதற்கு நானே சாட்சி என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதன் பின் ஏற்பட்ட படுகொலைகள் அனைத்திற்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என தெரிவித்தார்.

அண்மையில் தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# ஜெனீவாவில் தமிழரை தோற்கடித்த "தமிழ் வாக்குகள்"



“மஹிந்த ராஜபக்ச, மைத்ரி-ரணில் நல்லாட்சி,கோத்தபாய ராஜபக்ச, ரணில் அரசு போன்றவற்றினால் ஜெனீவாவில் சாதிக்க முடியாத விடயத்தை தமிழ் மக்களின் பேராதரவோடு ஆட்சிபீடம் ஏறிய அநுரகுமார அரசு அந்த தமிழ் மக்களின் ஆதரவைக் காரணம் காட்டியே தனக்கு சாதகமாக சாதித்து தமிழர் தரப்புக்களை ஜெனீவா தீர்மானத்தில் மண் கவ்வ வைத்துள்ளது““ ---கே.பாலா

-----------------------------------------------------------------

எதிரிகளை மன்னித்தாலும் துரோகிகளை மன்னிக்கக் கூடாது என்பது போரியல் மரபு.அது அரசியலுக்கும் சாதாரண வாழ்க்கைகவும் கூட நன்கு பொருந்தும்.ஏனெனில் எதிரிகள் நேரில் மோதுவார்கள்,துரோகிகள் கூட இருந்தே குழிபறிப்பார்கள், நம்பிக்கைத் துரோகம் செய்வார்கள். (தொடர்ச்சி 15ம் பக்கம்)